சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 03.10.2023 | supeedsam.com | supeedsam@gmail.com

ஆயுதப் போராட்டத்தை கைவிட்டமைக்காக வருந்துகின்றேன்

விடுதலைப் புலிகளுக்கு தினமும் ஒரு ரூபாய் வழங்கும் இலங்கை மக்கள்

நாட்டின் ஐம்பது வீதமான மக்கள் விடுதலைப்புலிகளின் புலம்பெயர் வலையமைப்பிற்கு நாளாந்தம் ஒரு ரூபாயாவது செலுத்துகின்றனர் என இலங்கை தனியார் போக்குவரத்து சங்க தலைவர் கெமுனு விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பும் ஐஎஸ் அமைப்புமே தற்போது அதிகளவு நிதியை பெறும் பயங்கரவாத அமைப்புகள் என அவர் தெரிவித்துள்ளார்.

நான் மேற்கொண்ட ஆய்வின் போது இது தெரியவந்தது. அனேக நிதி நிறுவனங்கள் விடுதலைப்புலிகளின்

02 ஆம் பக்கத்தில்...

தென்னிலங்கைக்குச் சிம்மசொப்பனமாக இருந்த ஆயுதப்போராட்டத்தினை முன்னெடுத்த நாங்கள் இன்று ஏன் அதனை கைவிட்டோம் என எண்ணி வருந்துகின்றேன் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின்

02 ஆம் பக்கத்தில்...

முல்லைத்தீவு நீதிபதி இராஜினாமாவின் பின்புலத்தில் வேளிநாட்டு தூதரகங்களா?

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி டி. சரவணராஜாவின் ராஜினாமாவின் பின்புலத்தை உடனடியாக அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

நீதிபதி டி. சரவணராஜாவுக்கு வெளிநாட்டு தூதரகங்களுடன் தொடர்பு இருந்துள்ளது எனக் கூறப்படுகின்றது. எனவே,

02 ஆம் பக்கத்தில்...

2013ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடைபேற்ற போதுநலவாய மாநாட்டுக்கான அரச செலவில் பாரிய ஊழல்

2013ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் போது இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டுக்காக (CHOGM) தேவையற்ற விதத்தில் பாரிய அளவில் நிதி செலவிடப்பட்டுள்ளதுடன், இதில் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அண்மையில் வெளியாகியுள்ள நிதி பகுப்பாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

களியாட்டங்களுக்காக பாரியளவில் நிதி வீண்விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதி: வடகிழக்கு சட்டத்தரணிகள் இன்று பாரிய போராட்டம்

முல்லைத்தீவு நீதிபதி ரீ. சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று திங்கட்கிழமை (02) தொடக்கம் காலவரையறையின்றி தொடர் நீதிமன்றப் புறக்கணிப்புகணிப்பை செய்வதாக முடிவெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினைச் சார்ந்த சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிப்பார்கள். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

கோத்தாபாய அருகில் அமர்வதை தவிர்த்த சந்திரிகா

சீன மக்கள் குடியரசின் 74ஆவது ஆண்டு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன்போது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இலங்கையின் சீனத் தூதரகம் அழைப்பு விடுத்திருந்தது. இதில் சந்திரிகா பண்டாரநாயக்க ரணதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்ரிபால சிறிசேன, கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அதாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிகளில் இன்னும் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் இவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இவர்கள் நால்வருக்கும் ஒரே மேசையில் அமர்வதற்கான நான்கு நாட்காலிகள்

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 | 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

சிறுவர் தினக் கொண்டாட்டம்

(யூ.கே. காலித்தீன்)

சிறுவர் தினத்தினை முன்னிட்டு கல்முனை வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில். சிறுவர் தினம் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அல்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு கல்முனை வலயத்தின் உளவலத்துறை ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.சியாம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை உதவி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திகுழு செயலாளர் எம்.ஜி. அஹமத், பாடசாலை பழைய மாணவர் சங்கத் செயலாளர் யூ.கே. காலித்தீன் ஆகியோரோடு பாடசாலை நலன் விரும்பிகளும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தனர். இப்பரிசுப் பொருட்களை இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் இருபர் நிதியுதவினை வழங்கியிருந்தனர்.

சாய்ந்தமருது கோட்டத்தில் இப்பாடசாலையில்தான் விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான பிரத்தியோக கல்வி நிலையமும் அதற்கான விஷேட கல்வி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களும் இருக்கின்றமை விஷேட அம்சமாகும்.

கோவிலூர் செல்வராஜனின் பொன்விழாவும் இலக்கிய தென்றல் மலர்வெளியீடும் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

விடுதலைப் புலிகளுக்கு தினமும் ஒரு ரூபாய் ...

நிதியிலேயே இயங்குகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தாங்கள் சேகரித்த பணத்தை உள்ளூர் அரசியல்வாதிகளிற்கு வழங்குகின்றனர். அரசாங்க ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் அவர்களை நம்பியே உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளை விடுதலைப்புலிகளும் ஐஎஸ் அமைப்பினரும் குழப்புவதால் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கும் உத்தேச ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலத்திற்கும் எதிர்ப்பு உருவாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கோத்தாபாய அருகில் அமர்வதை தவிர்த்த....

ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. எனினும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தான் கோத்தாபய அருகில் அமர்வதை விரும்பாது அருகிலுள்ள மேசையை தனக்கு ஏற்பாடு செய்து தருமாறு கேட்டதாக ஆங்கில பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கியு சென்ஹொங் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் மிக முக்கிய பிரமுர்கள் வரிசையில் இந்த நால்வரே பிரதானமாக இடம்பிடித்திருந்தனர்.

சீனத் தூதுவர் இந்த நால்வரின் ஆசனங்கள் குறித்து அதிக சிரத்தை எடுத்ததாகத் தெரிகின்றது. எனினும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அருகில் கோத்தாபயவின் ஆசனம் இருந்ததால் சந்திரிகா அவர் அருகில் அமர்வதை விரும்பியிருக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி காலத்தில் ரணில் மற்றும் மைத்ரியுடன் இணைந்து பயணித்த சந்திரிகா இடையில் மைத்ரி மகிந்தவை திடீரென பிரதமராக்கி நாடாளுமன்றத்தை கலைத்தவுடன் அவரை கடுமையாக விமர்சித்திருந்தமை முக்கிய விடயம்.

எனினும், சுதந்திர கட்சியின் தலைவராக அந்நேரம் மைத்திரி இருந்த காரணத்தினால் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதேவேளை தான் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்த மகிந்தவும் அதன் பிறகு சந்திரிகாவை ஓரங்கட்டிவிட்டு சுதந்திர கட்சியின் தலைமை பொறுப்பை கைப்பற்றினார்.

கோத்தாபய ஜனாதிபதியாவதை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்தவர் சந்திரிகா. அவர் இடையில் நாட்டை விட்டு வெளியேறியவுடன் ஜனாதிபதி பதவிக்கே இழுக்கு ஏற்படுத்தியவர் என சந்திரிகா ஒரு சந்தர்ப்பத்தில் கோத்தாபயவை விமர்சித்திருந்தார்.

கூறப்போனால், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த, மைத்ரி, கோத்தாபய ஆகிய மூவர் மீதும் சந்திரிகா வெறுப்புடனேயே இருக்கின்றார்.

எனவே, அன்றைய நிகழ்வில் இந்த மூன்று பேருடனும் அமர்வதற்கு அவர் விரும்பியிருக்கவில்லையென்றே தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீன மக்கள் குடியரசு 1950ஆம் ஆண்டு உருவான போது அந்த நாட்டை தெற்காசியாவில் முதன் முதலாக ஏற்றுக் கொண்ட நாடு இலங்கையாகும். மேலும் சீன - இலங்கை உறவுகள் ஆயிரம் வருடங்களை கடந்ததாகும்.

கி.பி.410ஆம் ஆண்டு சீனாவின் புகழ் பெற்ற ஜின் வம்ச துறவியான பாக்சியன் இலங்கைக்கு வருகை தந்து தான் சீனாவிலிருந்து கொண்டு வந்த புத்த மத நூல்களை அடிப்படையாகக் கொண்டு புத்த இராச்சியத்தின் பதிவுகள் என்று நூலை எழுதியமை குறிப்பிடத்தக்கது.

மேலும், மாதோட்டம் என்று அழைக்கப்படும் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு பல நூறு வருடங்களுக்கு முன்பே சீன வணிகர்கள் வந்தமைக்கான சான்றாதாரங்களும் உள்ளன. சிறிமா அரசாங்கத்தின்போது சீனா அரசாங்கம் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தை தனது நிதியில் அமைத்து கொடுத்தது.

பின்னர் மகிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை துறைமுகத்தையே சீனாவுக்கு வழங்கிவிட்டார். மத்தள விமான நிலையமும் சீன நிதியுதவியுடன் நிறைவு செய்யப்பட்டது.

எல்லாவற்றையும் விட கொழும்பு நிதி நகரை சீனாவுக்கு மகிந்த தாரை வார்த்து விட்டமையை உலகமே அறியும்.

அந்த வகையில் இலங்கை ஜனாதிபதிகளை சீனா என்றுமே தனிப்பட்ட ரீதியில் கௌரவித்து கவனிக்கும் முகமாகவே அன்றைய தினம் அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். கோத்தாபய மீது மக்கள் எதிர்ப்பு இன்னும் இருப்பதாலும் அவரது காலத்தில் கொண்டுவரப்பட்ட சில கொள்கைகள் நாட்டுக்கு ஏற்புடையதாக இல்லாததாலும் அதை பல தடவைகள் தான் விமர்சித்த காரணத்தினால் அவருக்கு அருகில் அமர்வதை சங்கடமாக உணர்ந்துள்ளார், சந்திரிகா.

மேலும், அவருக்கு அருகில் அமர்ந்திருந்தால் நிச்சயம் அவர் தன்னுடன் நாகரிகம் கருதி கதைக்க முற்படுவார். இதை ஊடகங்கள் திரிபுபடுத்தி செய்தியாக போட்டுவிட்டால் தனது பெயரும் மக்கள் மத்தியில் விமர்சிக்கப்படும் என்ற காரணங்களினால் அவர் அவருக்கு அருகில் அமர்வதை விரும்பியிருக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீதிபதிக்கு இழைக்கப்பட்ட அநீதி;

இதேவேளை, முல்லைத்தீவு நீதிபதி ரீ. சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக இன்று செவ்வாய்க்கிழமை (03) காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து அதிகளவான சட்டத்தரணிகள் இணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் உள்ளிட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கங்களின் சட்டத்தரணிகளும் இணைந்து இந்த பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி இராஜினாமாவின்....

அவர் கூறும் காரணங்களை மட்டும் நம்பாமல், இதன் பின்புலத்தை அரசு கண்டுபிடிக்க வேண்டும்.

முல்லைத்தீவு நீதவான் ஏன் பதவி விலகினார் என்பது பற்றி சரியான காரணங்கள் இன்னும் வெளிவரவில்லை. அவர் கூறும் காரணங்களை மட்டும் ஆராயாமல், இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

நீதிபதியை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பின் அதனை நாம் கண்டிக்கின்றோம்.' எனவும் குணதாச அமரசேகர குறிப்பிட்டார்.

சட்ட ஆட்சியா? சதித்திட்ட ஆட்சியா?: நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை !

ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பா.உ ,மட்டக்களப்பு

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவியை ராஜினாமா செய்த கையோடு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். உயிர் அச்சுறுத்தலும் உச்ச மன அழுத்தமுமே இதற்கான காரணமாகும்.

இந்த நிலையில் இந்நாட்டில் சட்ட வாட்சியா? சதித்திட்ட வாட்சியா? நடக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது.சட்டவாட்சி சரியாக இருந்திருந்தால் நீதிபதி சரவணராஜா பதவி விலகவோ நாட்டை விட்டு வெளியேறவோ வேண்டி இருக்காது.அவர் இந்த நிர்ப்பந்தத்திற்கு உள்ளானதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரதும்,சட்டமாதிபரதும் அழுத்தங்களே முக்கியமான காரணங்கள் என்று பரவலாகப் பேசப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீர சேகர அவர்கள் தனது சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதிபதி சரவணராஜா அவர்களைப் பற்றிக் காரசாரமாக விமர்சித்தார்.மேலும் சட்டமாதிபர் குருத்தூர் மலை விவகாரம் தொடர்பான நீதிபதியின் தீர்ப்பை மாற்றியெழுதுமாறு கூறியதாகவும் குறித்த நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இவை தவிர,நீதிபதியின் பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதுடன், புலனாய்வுத் துறையினர் அவரைத் தொடர்ந்ததாகவும் கூறியுள்ளார்.இந்த நிலையில் தனக்கு ஏற்பட்ட உச்ச அழுத்தம், உயிர் அச்சுறுத்தலால் நீதிபதி தான் நேசித்த பதவியையும் துறந்து, நாட்டையும் விட்டு வெளியேறியுள்ளார். இப்படியான நிலை இது தான் முதற்தடவை ஏற்பட்டுள்ளது.

ஆட்சியாளர்கள் தமது தாளத்திற்கு ஏற்ப ஆட மறுக்கின்றவர்களை, அடிபணிய வைப்பதற்கு கையாளுகின்ற உத்திகள் பலவுள்ளன. அவற்றில் பொலிஸ் பாதுகாப்பைக் குறைத்தல்,புலனாய்வுத் துறையினரைப் பின்தொடரவைத்தல் , அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல் என்பனவும் அடங்கும். இதை விட அநாமதேய தொலைபேசி அச்சுறுத்தல்களும் இடம் பெறுவதுண்டு. 2010 - 2015 இற்கு இடைப்பட்ட மகிந்த ஆட்சியில் பிரதம நீதியரசராக இருந்த சிராணி பண்டாரநாயக்கவுக்கும் பலத்த அரசியல் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதால் அவர் பதவியும் இழந்தார்.

சுதந்திரமான நீதித்துறையானது, அதிகார வர்க்கத்தின் தேவைக்கு ஏற்ப அசையாமல் அடங்காமல் செயற்பட்டால், அங்கு சட்ட வாட்சி நடைபெறும். அத்துறையும் அடங்கினால் சதிடத்திட்டங்களும், சர்வாதிகாரமும் தலை தூக்கி விடும்.

எனவே இன்றைய நிலையில் நீதிபதி சரவணராஜா அவர்களது பதவி துறப்பும், வெளியேற்றமும் நாட்டில் சட்டவாட்சியை விட சதித்திட்ட ஆட்சி வெற்றி பெற்றுள்ளதா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

பொருளாதாரத்தை வங்குரோத்து அடையச் செய்த பொருளாதாரக் குற்றவாளிகள், தற்போது சட்டவாட்சியையும் ஜனநாயகத்தையும் வங்குரோத்து நிலைக்குத் தள்ள முற்பட்டுள்ளனர்.

நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லாத சூழலில் மக்களின் நிலை என்னவாகும் என்பதை சர்வதேச சமூகம்,சர்வதேச அமைப்புகள் உரத்த சிந்தனைக்குட்பட்டுத்தி, துரிதமாகச் செயற்பட வேண்டியுள்ளது. பொருளாதாரத்தையும்,தேசிய ஐக்கியத்தையும்,மனிதவுரிமைகளையும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய சிங்கள பௌத்த அடிப்படைவாதிகள் இனமத துவேசத்தில் மட்டும் தம்மை ராஜாக்களாக நினைக்கின்றார்கள்.

2013 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் நடைபெற்ற

பாரிய அளவில் ஊழல் செய்ததன் காரணமாகவே இந்த மாநாடு தொடர்பான இயல்புநிலை அறிக்கையை ராஜபக்ஷவின் ஆட்சி வெளியிடவில்லை எனவும் இந்நிதி பகுப்பாய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

நகரம் மற்றும் பாதைகளை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் அப்போதைய கொழும்பு மேயரால் பெறப்பட்ட அரச வங்கிக் கடனில் 800 மில்லியன் ரூபாவை கொழும்பு மாநகரசபை திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த பாரிய கடன் தொகையானது அரச வங்கி இருப்புநிலைக் குறிப்பில் திரும்பப் பெறுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அதனைத் தள்ளுபடி செய்ய அனுமதிக்காமல் செயற்படாத கடனாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக அரசு வங்கிகளில் பெறப்படும் கடன்களை அரசாங்கம் செலுத்துவதில்லை. ஆனால், அப்பாவி ஏழைகள் கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையாக ரூ.100,000 அல்லது ரூ.200000 ஐ திருப்பிச் செலுத்த முடியாமல் தவிக்கின்றன.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட நாற்பத்தொன்பது சொகுசுப் பேருந்துகள் மாநாட்டுக்கு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பொதுப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், அவை தற்போது செயலிழந்து நீண்டகாலமாகியுள்ளது. அவற்றை சரிசெய்ய உதிரி பாகங்கள் இல்லை என இலங்கை போக்குவரத்துச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இந்த பேருந்துகளில் தினசரி வருவாய் ரூ. 80,000 முதல் 90,000 வரை காணப்பட்டது. இவை அரச திறைசேரிக்கு சென்றுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்கு (CHOGM) விளம்பரம் மற்றும் ஊடகப் பரப்புரைக்காக, வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சினால் 1.18 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது உத்தியோகபூர்வ ஆவணங்களில் தெரியவந்துள்ளது.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு ஊடகவியலாளர்களுக்கான இரவு விருந்துக்காக 10 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

அதன்படி, திறைசேரி மானியங்கள் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியானது, ஒன்பது வகைகளின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. ஊடக மையத்தின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, மின்னணு ஊடகங்களில் விளம்பர நிகழ்ச்சிகள் மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு இவ்வாறு நிதி செலவிடப்பட்டுள்ளது.

அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், உத்தியோகபூர்வ சின்னம் மற்றும் செய்தித்தாள் விளம்பரங்களுக்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பொழுதுபோக்கு, இரவு உணவுகள், CHOGM திட்ட அலுவலக அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள், அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிற செலவுகளுக்கு பாரிய தொகை செலவிடப்பட்டுள்ளது.

ஊடக மையத்தின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்காக 8.28 பில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும், மக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்காக 180.55 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் (CHOGM) கலந்துகொண்ட அரச தலைவர்களின் துணைவிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட தனித்துவமான brooches களுக்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பில் ஊழல் குற்றச்சாட்டுகள் உளடளதாகவும் கூறப்படுகிறது.

72 brooches தயாரிப்பதற்கான உண்மையான செலவு ரூ.2.88 மில்லியன் செலவாகும் என கைவினைஞர் ஒருவர் குறிப்பிட்டாலும் 72 brooches களை தயாரிப்பதற்கு மொத்தமாக ரூ.18 மில்லியன் செலவு செலவாகியுள்ளதாக நிதி பகுப்பாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த நிதி முறைகேடு நடந்து 10 ஆண்டுகள் ஆகியும் ஊழல் பேரத்தில் ஈடுபட்ட எந்த அதிகாரி மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆயுதப் போராட்டத்தை கைவிட்டமைக்காக வருந்துகின்றேன்

செயலாளர் நாயகமான கோவிந்த கருணாகரம் அவர்களின் 60வது பிறந்த நாளை முன்னிட்டு மட்டக்களப்பு தேவா நாயகம் மண்டபத்தில் நடைபெற்ற ஜனாவின் வாக்குமூலம் என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்இலங்கையில் எங்கு பாத்தாலும் புத்த பிக்குகளின் நாட்டாமைத்தனத்தையும், முப்படைகள் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் அடாவடித்தனத்தையும் காணக்கூடியதாக உள்ளது.

இதனையெல்லாம் பார்க்கும் போது ஏன் ஆயுதப் போராட்டத்தினைக் கைவிட்டோம் என வருத்தமாக உள்ளது. மீண்டும் ஆயுதப்போராட்டத்தினை ஆரம்பித்தால் என்ன? என்ற எண்ணமும் தோன்றுகின்றது இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமிழீழ விடுதலை கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்,ஈபிஆர்எல்எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகசபை,சீ.யோகேஸ்வரன்,பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவானின் பதவி விலகலும் இலங்கை நீதித்துறையின் மீதான இறுதி நம்பிக்கையும்

(அ . அச்சுதன்)

இலங்கை சுதந்திரமடைந்த காலந் தொட்டு இந்நாட்டின் நீதித்துறை ஏனைய அரச துறைகளைப் போன்றே சிங்கள பௌத்த பெருந் தேசிய ஒடுக்குமுறையை நிலை நாட்டும் இன்னுமொரு துறையாக இருந்து வருவதை நாம் அறிவோம். யுத்தம் அதிதீவிரமாக நடைபெற்ற காலப்பகுதியில் நீதித்துறைக்கான வேலைகளை படைத்தரப்பு தமிழர் தாயக பிரதேசங்களில் நிலைநிறுத்தும் வாய்ப்புக்களை அரசிற்கு வழங்கவேயில்லை. ஆனாலும் முன்னாள் சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆட்சியில் இருந்த போது இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் படைத்தரப்பால் நடாத்தப்பட்ட பல படுகொலைச் சம்பவங்களில் மிக நேரடியாக தொடர்பு நிரூபிக்கப்பட்ட படைத்தரப்பினரை கைது செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்றதை நாம் அறிவோம். சகோதரி கிரிசாந்தி படுகொலை அதனைத் தொடர்ந்த செம்மணி புதைகுழி விவகாரம், மிருவில் படுகொலை, குமாரபுரம் படுகொலை, தம்பலகமம் பொற்கேணி படுகொலை போன்றன அவற்றில் சில உதாரணங்களாகும். ஆனால் கைது செய்யப்பட்ட அத்தனை படைத்தரப்பு ஆட்களையும் இலங்கை நீதித்துறை விடுதலை செய்திருக்கிறது. வழக்கை சிங்களவர்கள் பிரதேச நீதிமன்றங்களுக்கு மாற்றுவதும் அங்கே வைத்து சாட்சிகள் மிரட்டப்பட்டு பொய் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளும் நாம் அறிந்தவையே. இது தொடர்பான எத்தனையோ முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணையத்திடம் முறையிடப்பட்டுள்ளமை வெளிப்படையானது.

அதே வேளை தமிழர் தாயக பிரதேசங்களில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட விகாரைகள் தொடர்பாக 2006 ஆம் ஆண்டில் திருகோணமலை பேருந்து நிலையத்தில் ஆக்கிரமித்து வைக்கப்பட்ட புத்தர்சிலையை அகற்ற வேண்டும் என்கிற நீதிமன்ற தீர்ப்பை இனங்களுக்கிடையிலான முறுகலை ஏற்படுத்தும் என பொலிஸ் தரப்பின் வாதத்தை ஏற்று நீதிமன்று இன்று வரையும் அகற்றாமல் இருப்பதையும் நாம் அறிவோம். தமிழர் தாயக பிரதேசமெங்கிலும் தமிழர் நிலங்கள் மீதான அரசின் ஆக்கிமிப்புக்களுக்கெதிராக நூற்றுக்கணக்கான வழக்குகள் இன்னும் நிலுவையிலுள்ளன. இது வரையும் ஒரு வழக்கிற்கும் தீர்ப்பு கிடைக்கவில்லை.

அண்மையில் முல்லைத்தீவில் குருந்தூர் மலை ஆக்கிமிக்கப்பட்டு பௌத்த விகாரை கட்டப்பட்டதன் பின்பு முல்லைத்தீவு நீதிமன்றின் அவ்விகாரைக்கெதிரான தீர்ப்பு தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரு ஆறுதல் வெற்றியாகும். ஆனாலும் அவ்விகாரை நீதிமன்ற தீர்ப்பை மீறிக்கட்டப்பட்டதும் அதன் பின் நடைபெற்ற நிகழ்வுகளையும் நாம் அறிவோம். இந்த தீர்ப்பை வழங்கிய மாவட்டத்தின் நீதிபதியை ஒரு அமைச்சர் பாராளுமன்றத்தில் வைத்து பைத்தியக்காரன் என்று பேசியதை இந்த நாடே மௌனமாக பார்த்துக் கொண்டு இருந்தது. நீதித்துறை மீது நம்பிக்கை கொண்ட சிங்கள முற்போக்கு தரப்புக்களின் மௌனம் தான் இந்த விடயத்தில் மிகவும் கொடுமையானதாகும்.

மேற்படி முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தனது பதவியை உயிர் அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் என்பவற்றை காரணமாக முன்வைத்து இராஜினாமா செய்திருக்கிற செய்தியை நேற்றிலிருந்து ஊடகங்கள் வாயிலாக அறிந்து நாம் மிக கவலை கொள்கிறோம். அவர் மீது நிகழ்த்தப்பட்ட அழுத்தங்களையும் உயிர் அச்சுறுத்தல் செயற்பாடுகளையும் நாம் மிக வன்மையாக கண்டிக்கின்றோம். நாட்டின் ஒரு நீதிபதிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கிறதெனில் இந்த நாட்டின் சாதாரண தமிழ்க்குடிமகனின் நிலைமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சனநாயகம் பேசும் பெரும்பான்மைச்சமூக முற்போக்காளர்கள், அரகலய போன்ற போராட்டங்களை முன்னின்று நடாத்திய சிவில் சமூகங்கள், நாட்டின் இடதுசாரிகள் என சொல்லிக் கொள்ளும் ஜேவிபி, முன்னிலை சோசலிச கட்சி போன்ற கட்சிகள் இவ்விடயம் தொடர்பாக தமது மௌனம் கலைத்து இந்த வகை பேரினவாத செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். நீதிமன்றங்களை நம்பியிருக்கும் நீதித்துறை சார்ந்த பிரிவினர் இவ்விடயம் தொடர்பாக காத்திரமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

நீதித்துறை மீது நம்பிக்கை கொண்ட அனைத்து சட்டத்தரணிகளும் இந்த விடயத்தில் ஒன்று திரண்டு இன்னுமொரு நீதிபதிக்கு இவ்வாறு நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். சிவில் சமூகங்கள் மீளவும் அணி திரண்டு இந்த விடயத்தை பேசு பொருளாக்க வேண்டும். தமிழ் தேசிய பரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தை தேசிய சர்வதேச மட்டங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். இலங்கை பேரினவாத அரசின் போலியான நல்லிணக்க முகமூடிகளை வெளிக்கொணர ஆக்கபூர்வமான நடைமுறைச்சாத்தியமான அத்தனை வழிமுறைகளையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையிலெடுக்க வேண்டும். தமிழ்த்தேசிய சிதைப்பு நடவடிக்கைகளுக்கெதிராக நம் பாராளுமன்ற உறுப்பினர்களை இணைந்து எதிர்வினையாற்றாமல் தடுக்கின்ற உள்அரசியலை புறந்தள்ளி ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும்.

இலங்கை நீதித்துறை மீதான நம்பிக்கைகள் எமக்கு இல்லையாயினும் அதனை நம்பும் அப்பாவி மக்களுக்கு அது கிடைப்பதற்கான ஆகக்குறைந்த பொறிமுறையை அரசாங்கம் உறுதி செய்யாமல் விட்டு அதனூடாகவும் ஒரு இன வெறுப்பை தூண்டி வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ளும் தந்திரோபாயங்களை சர்வதேசம் புரிந்து கொள்ளும் என நாம் நம்புகிறோம்.. மக்களின் பாதுகாவலன் வேடம் போட்டுக் கொண்டு மறு பக்கமாக இனவாதிகளுக்கு தூபம் போடும் வேலைகளை சிங்கள அரசாங்கம் நிறுத்திக் கொள்ள அவர்கள் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். பேரினவாத ஒடுக்குமுறைகளை கைவிட்டு தூய்மையான சிந்தனை மாற்றங்களுடன் சிங்கள பெரும்பான்மை மக்கள் நல்லிணக்க அரசியலை முன்னெடுக்க வேண்டும் என நாம் கோரி நிற்கின்றோம். சாதாரண மக்களை அச்சுறுத்தும் இவ்வகையான செயற்பாடுகளுக்கு எதிராக நாம் மிக வன்மையான கண்டனங்களை பதிவு செய்கின்ற அதே வேளை நாடு முழுவதிலிருந்தும் அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டை கண்டித்து நடாத்தப்படும் மக்கள் போராட்டங்களை நாம் ஆதரித்து நிற்கின்றோம் என திருகோணமலை புழுதி சமூக உரிமைகளுக்கான அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

புழுதி- சமூக உரிமைகளுக்கான அமைப்பு,
திருகோணமலை.
2023.09.30

தம்பலகாமம் வைத்தியசாலை தீ சம்பவம் தோடர்பில் ஆராய்வு

(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் (01) தீப்பரவல் சம்பவம் இடம் பெற்று குறித்த கட்டிடம் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் உபகரணங்களும் எறிந்து சாம்பலாகின.

குறித்த சம்பவம் தொடர்பில் (02) அரச பகுப்பாய்வு திணைக்களம் தடயவியல் பொலிஸார் இணைந்து தம்பலகாமம் பிரதேச வைத்தாயசாலையின் சம்பவ இடத்துக்கு சென்று மாதிரிகளை பெற்றுள்ளனர்.

இதில் ஆய்வு கூட உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் என பல இலட்சக்கணக்கான ரூபாக்கள் பெறுமதியான சொத்துக்கள் சாம்பலாகியுள்ளன.

வெளிநோயாளர் பிரிவு தொடர்ந்தும் இன்றைய தினமும் இயங்கி வருகின்றன. இது தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஊடாக மதிப்பீட்டு நடவடிக்கைகள் மருந்துப்பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்பிலும் உரிய அதிகாரிகள் சென்று நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய சாதனை!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் தேசிய தமிழ் சிங்கள நடன போட்டியில் சாதனை படைத்துள்ளனர்.

இத் தமிழ் சிங்கள நடன தேசிய மட்ட போட்டியானது 01.10.2023 அன்று கண்டி பொல்கொல மகாவலி தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் கலை,கலாசார அமைச்சின் ஏற்பாட்டில்"பிரதீபா" தேசிய மட்டப் போட்டிக்கு கல்முனை கலாசார மத்திய நிலையத்தினூடாக காரைதீவு விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் பங்கேற்றனர்.

அங்கு அவர்கள் 2ம் இடத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

பயிற்றுவித்த நடன ஆசிரியை திருமதி சர்மினி சுதாகரன் மற்றும் ஸ்தாபகர் ஜெயகோபன் தக்ஷாளினி ஆகியோருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

வவுனியா நிருத்தியாலயம் முதலிடத்தை பெற்றது.

விபுலானந்தா நாட்டிய பாடசாலை தொடங்கி நான்கு வருட காலத்தில் முதல் தடவையாக தேசிய மட்டத்தில் தோற்றி முதல் தடவையாக இரண்டாம் நிலையில் சாதனை படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு முத்திரை வெளியிடப்பட்டது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கல்விச் சேவையில் 150 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசியப் பாடசாலையின் சாதனையைக் கௌரவிக்கும் வகையில் (29) முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

சிவப்பு மற்றும் நீலநிறப் பின்னணியில் கல்லூரியின் தனித்துவமான அழகிய முகப்புத் தோற்றத்தையும், கல்லூரியின் இலச்சினையையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்ட இந்த ஞாபகார்த்த முத்திரை இலங்கை ரூபா. 25.00 பெறுமதியுடையதாகும்.

1873 ஆம் ஆண்டில் இயேசு சபை துறவி வண. பிதா. பேர்டினன்ட் பொனெல் இனால் ஆரம்பிக்கப்பட்ட இவ் ஆண்கள் பாடசாலையானது 150 ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்கின்றது. இதனைக் குறிக்கும் வகையில் [illegible] நிலையில் இந்த முத்திரை வெளியிடப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இம் முத்திரை வெளியீட்டு விழாவில் பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சபையினர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தேசிய மட்ட போட்டிக்கு தகுதி

(தலவாக்கலை பி.கேதீஸ்)

மாகாண மட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் பாவோதல் பிரிவு 3 போட்டியில் மத்திய மாகாணத்தில் 15 கல்வி வலயங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தை கிறேட்வெஸ்டன் பாடசாலை மாணவன் எஸ்.தனுபிரசாந் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இவரை பாராட்டும் முகமாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவனுக்கு பதக்கம் அணிவித்து கௌவித்தார். போட்டியில் வெற்றி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவனுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகம் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது. அதே வேளை நுவரெலியா கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் மிகவும் கஸ்ட பிரதேச பாடசாலையான கிறேட்வெஸ்டன் பாடசாலை மாகாண மட்டத்தில் நடைப்பெற்ற ஆங்கில மொழி தின போட்டிகள் மற்றும் தமிழ் மொழித் தின போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளைகள் ஏக்கத்துடன் வருகின்றனர் ஆசிரியர்களே வழிகாட்டுங்கள்

உங்களிடம் வருகின்ற அத்தனை பிள்ளைகளும் தாம் சிறந்தவர்களாக உருவாக வேண்டும் என்ற ஏக்கத்துடன்தான் வருவார்கள். குறிப்பாக நானும் கல்விமானாக, நானும் வெற்றியாளனாக வருவேனா? என்ற ஏக்கத்துடன்தான் பிள்ளைகளும் பாடசாலைக்குள் வருகின்றனர். உங்களிடம் ஒப்படைக்கப்படும் அப்பிள்ளைகளை தாயாக, தகப்பனாக அணுகி வாழ்க்கைக்கான வெற்றிகளை வழிகாட்டுங்கள் என மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் யோ. ஜெயச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலய 140வது ஆண்டு நிறைவு விழாவும் சாதனையாளர் பாராட்டு நிகழ்ச்சியும் இன்று(01) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது, அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வறைகூவலை விடுத்துள்ளார்.

மேலும், அவர் அங்கு கருத்துக்கூறுகையில்,

கல்விக்கான தேடலும் அவசியமும் உணரப்பட்ட நிலையில் பணிப்பாளர் பதவியை பொறுப்பேற்றிருக்கின்றேன். இப்பிரதேசத்தில் இரண்டு விடயங்களை கடினமான விடயங்களாக உணர்ந்திருக்கின்றேன். மாணவர்களின் இடைவிலகல், விஞ்ஞானக்கல்வியை அபிவிருத்தி செய்வதில் உள்ள சவால். இவற்றைதான் எனது சவாலாக கருதுகின்றேன். பாடசாலையொன்றிலே தரம் 1இல் கல்வி கற்க வருகின்ற மாணவர் தரம்11இல் தோல்வி அடைந்து செல்கின்றார் 13வருடம் கல்வி கற்ற மாணவர் உயர்தரத்தில் சித்தியடையாது செல்கின்றார். இவை நாங்கள் அனுபவத்தில் கண்ட வலிகளாக உள்ளன.

வெற்றி பெறும் மாணவர்களை வெற்றி பெற வைப்பதுதான் இவ் விளம்பர உலகத்தில் முன்நிற்கின்ற தன்மையை காண முடிகின்றது. தாங்க வேண்டிய பிள்ளைகள், ஊக்கப்படுத்த வேண்டிய பிள்ளைகள் தொடர்பிலான அக்கறை அருகிக் கொண்டு செல்கின்றது.

அன்பான ஆசிரியர்களுடன் வினயமாகவும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றேன். உங்களிடம் ஒப்படைக்கப்படும் பிள்ளைகளை தாயாக, தகப்பனாக அப்பிள்ளைகளை அணுகி வாழ்க்கைக்கான வெற்றிகளை வழிகாட்டுங்கள். உங்களிடம் வருகின்ற அத்தனை பிள்ளைகளும் ஏக்கத்துடன் வருவார்கள். நானும் கல்விமானாக, நானும் வெற்றியாளனாக வருவேனா? என்ற ஏக்கத்துடன்தான் பிள்ளைகளும் பாடசாலைக்குள் வருகின்றனர்.

ஒவ்வொரு பிள்ளைக்குமான குடும்பச்சூழ்நிலை, பிரதேசசூழ்நிலை, தொழில்சார்ந்த சூழ்நிலைகள் வெவ்வேறாக இருக்கின்ற சூழலில் நாங்கள் பொதுமைப்படுத்தப்பட்ட கற்பித்தலை மேற்கொள்வது இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானதாக அமையாது என நான் நம்புகின்றேன். இக்கல்விப்புலத்திலே இருக்கின்ற மிகப்பெரிய ஏக்கம் மாணவர்கள் ஒழுக்கத்தில் இல்லையென்பதுதான் ஆகவே இவ்வொழுக்கத்தை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு கொண்டு செல்ல முடியும் என்பது தொடர்பில் தயார்படுத்தலை மேற்கொள்ள வேண்டும்.

மிகவும் சவாலான காலத்திலே கல்விப்பணியிலே கடமையாற்றப் பணிக்கப்பட்டுள்ளோம். மாணவர்கள் ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் பின்னோக்கி செல்கின்றமையை காண்கின்றோம்.

மாணவர்களே! உங்களின் ஒழுக்கமும் நடத்தையின் பெறுமதியும் தான் வாழ்க்கையின் உச்சம். எல்லா விடயங்களையும் தாண்டி ஒழுக்கமே உயர்வானது.

ஒவ்வொரு வீடுகளிலும் பிள்ளைகளை முகாமைத்துவம் செய்வதற்கு பெற்றோர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பிள்ளைகளை வீதிக்கு இறக்கி விளையாட விடுவதற்கு அச்சப்படுகின்றோம். காரணம் சமூகம் தவறாக செல்கின்றதா? தெரியவில்லை.

ஆளுமையுள்ள, ஒழுக்கமுள்ள சமூகத்தினை உருவாக்க அனைவரும் முன்வாருங்கள் அதற்காக நானும் தயாராக இருக்கின்றேன். என்றார்.

பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், வித்தியாலய அதிபர் க.அரசரெத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ந.குகதாசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மூ.உதயகுமாரன் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தமையுடன் சாதனையாளர்களுக்கு நினைவுச்சின்னங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

சிறுவர்தின நிகழ்வும் சிறுவர் விளையாட்டுப் போட்டியும்

(எஸ்.சபேசன்)

சர்வதேச சிறுவர்தினத்தினை முன்னிட்டு பெரியநீலாவணை சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெரியநீலாவணை தொடர்மாடியில் நடைபெறும் இலவசவகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களின் சிறுவர்தின நிகழ்வும் சிறுவர் விளையாட்டுப்போட்டியும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை செஞ்சிலுவைச் சங்கத் தொடர் மாடிப் பிரதேசத்தில் ஊடகவியலாளர் சா .நடனசபேசன் தலைமையில் இடம்பெற்றது.

சமூக செயற்பாட்டாளர் உமாச்சந்திரன் அவர்களின் முயற்சியினால் தரம் 1 தொடக்கம் தரம் 10 வரை அனைத்துப் பாடங்களும் இலவசமாக நடைபெற்று வருகின்றன. இம் மாணவர்களை சந்தோசப்படுத்தும் நோக்கில் இவ்விளையாட்டு விழா நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அதிதிகளாக பெரியநீலாவணை சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஆலோசகர் சந்திரசேகரம் ஓய்வுநிலை பொறியியலாளர் சர்வானந்தா சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் விமல்ராஜ் மற்றும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இ.மி.சபை பேசாலை மக்களின் காணிகளை கையடக்குவதை உடன் நிறுத்த வேண்டும்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவில் இலங்கை மின்சார சபை காற்றலை அமைக்கும் திட்டத்தை விரிவுப்படுத்தும் நோக்குடன் மக்களின் காணிகளை அவர்களின் சம்மதம் இன்றி தாங்கள் கையடக்கப்படுவதால் பேசாலை மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக பேசாலை பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அடிகளாரின் ஏற்பாட்டில் இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன்; பேசாலை பங்குத் தந்தை பணிமனையில் மன்னார் பிரஜைகள் குழு பங்களிப்புடன் பேசாலை மக்களுடனான விஷேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது மக்களால் இங்கு முன்வைக்கப்பட்ட கருத்துகளாக

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவில் அபிவிருத்தி என்ற போர்வையில் இன்று வீட்டு வாசல் வரையும் இவ்வாழ் மக்களை நசுக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே மன்னார் தென் கடலோரப் பகுதியில் 100 மெஹா வோட் காற்றாலை மின் ஆலை அமைக்கப்பட்டுள்ளது. இது இங்குள்ள மக்களின் எவ்வித ஆலோசனைகளும் இன்றியே அமைக்கப்பட்டுள்ளது. இருந்தும் இக் காற்றாலை அமைக்கும் திட்டத்தை இவ்வாழ் மக்கள் எதிர்க்கவில்லை. இத்திட்டம் எமது நாட்டில் உருவாக வேண்டும் என்பதும் எங்கள் விருப்பமாகும்.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பகுதியில் அதாவது பேசாலைப் பகுதியில் முதல் காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் இன்று வரை இப்பகுதி மக்கள் வாழ்வாதார ரீதியாகவும் அனர்த்தம் ரீதியாகவும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறித்த பிரச்சனைகள் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டப்பட்ட போது கருணைமிக்க பதில்கள் மட்டும் எமக்கு கிடைக்கப்பட்டன. ஆனால் இதற்கான தீர்வுகள் அசமந்த போக்கிலே இருந்து வருகின்றன.

முன்னர் ஏற்படுத்தப்பட்ட காற்றாலைகளுக்கு 200 ஏக்கர் நிலங்கள் கையடக்கப்பட்டன. மன்னார் தீவு 5 கிலோ மீற்றர் அகலம் கொண்டவை.

இதற்குள் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்குள் இவ் காற்றாலைகள் அமைக்கப்படுவதால் அதாவது மக்கள் குடியிருக்கும் பகுதிக்குள் இவைகள் அமைக்கப்படுவதால் மக்கள் சொல்லொன்னாதுன்பங்களுக்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

அது மட்டுமல்ல காணி உரிமையாளர்களின் எந்தவித சம்மதமும் இன்றி அவர்களின் காணிகள் தந்திர உபாயமாக அபகரிக்கப்பட்டும் வருகின்றது.

மன்னார் தீவில் தொடர்ந்து காற்றாலை அமைக்கும் பணிகள் தொடருமாகில் இத்தீவில் வாழும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் நிலையும் தற்பொழுது உருவாகியுள்ளது.

ஆகவே இது தொடர்பாக உயர் அதிகாரிகளை இங்கு அழைத்து வந்து சரியான முறையில் கலந்துரையாடாமல் தற்பொழுது விரிவுப்படுத்தும் வேலைத் திட்டங்களை உடன் நிறுத்துமாறு இம்மக்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மூதூர்- மணற்சேனையில் முதியோர் தினம்

(அ . அச்சுதன்)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மூதூர் - மணற்சேனை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை முதியோர் தினம் கொண்டாடப்பட்டது.

மணற்சேனை மனாளன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மணற்சேனை பகுதியைச் சேர்ந்த 25 ஆண் பெண் முதியோர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் முனவ்வறா நளீம் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளாக முன்னாள் மூதூர் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் , மற்றும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன். சற்சிவானந்தம் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சுற்றுலா தினத்தினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கடற்கரை கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டி வேற்றிகரமாக நிறைவு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சர்வதேச சுற்றுலா தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் நடாத்திய கடற்கரை கால்ப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று (29) திகதி கல்லடி கடற்கரையில் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த கடற்கரை கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 24 ஆண்கள் அணியும், 4 பெண்கள் அணியுமாக மொத்தம் 27 அணிகள் பங்குபற்றின. இறுதிப் போட்டி, அரை இறுதிப்போட்டி, 3ம் இடத்தினைத் தெரிவு செய்யும் போட்டி உள்ளடங்களாக 27 போட்டிகள் இடம்பெற்றன. இதில் 1ம், 2ம், 3ம், 4ம் இடங்களைப் பெற்ற ஆண், பெண் இருபால் அணிகளுக்குமாக பெறுமதிமிக்க பணப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன் அரவரது 60வது பிறந்தநாள் தின நிகழ்வும் இதன்போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் கொண்டாடப்பட்டது.

சுற்றுலாத்துறை மேம்பாடு, போதையற்ற சமூகத்தை உருவாக்கல், கரையோர சுத்தம் பேணல், கய தொழிலை முன்னேற்றுதல் (உள்ளூர்உற்பத்தியாளர்கள்) ஆகிய சமூக நல இலக்குகளை நோக்கிய பார்வையில் மட்டக்களப்பு மாவாட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி ஸ்ரீகாந்த் தலைமையில் இரண்டு நாள் நிகழ்வாக இச்சுற்றுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்போட்டித் தொடரில் பெண்கள் அணி சார்பாக கலந்து கொண்ட பன்சேனை இளைஞர் விளையாட்டுக் கழக வீராங்கணைகள் முதலாம் இடத்தினையும், 2ம், 3ம், 4ம் இடங்களை முறையே தன்னாமுனை சென் ஜோசப் விளையாட்டுக் கழகம், அம்பலாந்துறை கதிரவன் விளையாட்டுக் கழகம், கிரான் புழுஸ்டார் விளையாட்டுக் கழகம் என்பன தட்டிக் கொண்டன.

இதேவேளை ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும், 2ம் இடத்தினை இக்னேசச் அணியும், 3ம், 4ம் இடங்களை லைட்ஹவுஸ் விளையட்டுக் கழகம் மற்றும் ஈஸ்வரன் வழளையாட்டுக் கழகம் என்பன தட்டிக் கொண்டன.

இவ்வெற்றி பெற்ற அணிகளுக்கான 1ம் பரிசு 50ஆயிரம் ரூபாவும், 2ம் பரிசு 40 ஆயிரம் ரூபாவும், 3ம் பரிசு 30 ஆயிரம் ரூபாவும், 4ம் பரிசு 20 ஆயிரம் ரூபாவும் பணப்பரிசில்களாக வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளுக்கான பிரதான அனுசரனைகளை கனிஸ்கா கொம்போல் நிறுவனம், நியுசெஞ்சரி எம்.ஜே.எப். லயன்ஸ் கிளப், பெரோரா பேட்டிலைசர் நிறுவனம் என்பன வழங்கியிருந்தன.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக கவாமி விபுலானந்தா அழகியல் கற்கை பீடத்தின் மேலாளர் திருமதி. பாரதி கெனடி, மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக விளையாட்டு உத்தியோகத்தர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், சுற்றுலாத்துறை அதிகாரிகள், உதைபந்தாட்ட ரசிகர்கள், பெருந்திறளான பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்

உ43 இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் சிறுவர் தின கொண்டாட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கல்லடி 243 வது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் சிறுவர் தின கொண்டாட்ட நிகழ்வு இன்று மிகச்சிறப்பாக இடம் பெற்றது.

மட்டக்களப்பு - கல்லடி 243 வது இராணுவ படைப்பிரிவின் பிறிக்கேட் கொமாண்டர் சந்திம குமார சிங்க தலைமையில் பாலமீன்மடு கலங்கரை விளக்கிற்கு (Light house) அருகாமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரெட்ண கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், சிறப்பு விருந்தினராக அம்பாரையிலுள்ள 24 வது படைப்பிரிவின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திர ஸ்ரீ கலந்து சிறப்பித்திருந்தார்.

பிரதம அதிதி உள்ளிட்ட சிறப்புஅதிதிகள் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டதனைத் தொடர் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் நடன கலைஞர்களின் வரவேற்பு நடனம் நிகழ்வை அலங்கரித்திருந்தது.

வரவேற்புரையினை தொடர்ந்து சிறுவர்களின் கண்கவர் நடனம் இடம் பெற்றதை தொடர்ந்து, அதிதிகளினால் நடை கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறார்களுக்கு விசித்திர பொம்மலாட்ட கலைஞர்களால் இனிப்பு வகைகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், சிறார்களை மகிழ்விக்கும் முகமாக சிறுவர்பூங்காவில் பல்வேறு விளையாட்டுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இன்று மாலை விநோத விளையாட்டுக்கள் மற்றும் இசை நிகழ்ச்சி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நவீன தமிழ் இலக்கியம்; பார்வை; 02

தமிழகத்து நவீன தமிழ்க் கவிதைப் போக்கில் அதன் பண்புகளின் வெளிப்பாடு

ஆரம்ப காலப் பார்வை (1850 - 2000)

சின்னத்தம்பி குருபரன்

உலக இலக்கியப் போக்கில் அதன் சிந்தனைப் போக்கை மாற்றியமைத்த பெருமை நவீன கவிதைக் குண்டு. நவீன கவிதைகளில் அண்மைய பல விடயங்கள், பல தொனிப் பொருளில் புதிய வடிவங்களில் வெளிவந்தன. அத்தகைய நவீன தமிழ்க் கவிதையின் பிறப்புக்கு ஆணி வேராக அமைந்தவன் யுகப் பெரும் கவிஞன் மகாகவி பாரதியாவான். பாரதியின் கைவண்ணத்தில் மெருகு பெற்று., நடை பயின்று உச்ச வடிவம் பெற்றது. இத்தகைய நவீன கவிதைகளின் பண்கபுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவதே இக் கட்டுரையாகும்.

நவீன தமிழ்க் கவிதையின் மூலகர்த்தாவான பாரதி தனிமனித வாழ்க்கையையும், சமயத்தையும் சார்ந்து நின்ற தமிழ்க் கவிதையைச் சமுதாயத்தின் சகல துறைகளுக்கும் உரிமையுடையதாக்கிக் கவிதையைப் பொது மக்களின் சொத்தாக்கினார். நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று முழங்கித் தமிழ்க் கவிஞனுக்குச் சமூகத்தில் ஓர் உன்னதமான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தவரும் பாரதியேயாவார். புதிய புதிய கருத்துக்களும், வடிவங்களும், தமிழ் பற்றும், தேசப் பற்றும், சீர்திருத்த நோக்கும் அதன் வேகமும், பெண்மையின் எழுச்சியும், புரட்சிகரமான கொள்கையும், எளிமையும் இன்றைய தமிழக் கவிதையின் வடிவம், உள்ளடக்கம், உத்தியாகக் கொள்வதற்கு வழி சமைத்துக் கொடுத்ததில் பாரதியாருக்குப் பெரும் பங்குண்டு. கவிதை வெறியும் உணர்ச்சி பிரவாகமும் பொங்கித் ததும்பும் இவருடைய பாடல்களில் புதிய உவமைகளையும் கற்பனையின் அழகிய வெளிப்பாடுகளையும் நறுக்குத் தெறித்தாற் போன்ற சொற்களையும் மனதைக் கவரும் வடிவங்களையும் அவரின் கவிதைகளில் எங்கும் காணலாம்.

பாரதியாரின் கவிதைகளை ஆய்வு செய்த பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை (1968, தமிழ் சுடர்மணிகள், பக் 314) பாரதியாரின் தமிழில் ஓர் ஒனி எங்கும் பரந்து விளங்கக் காண்கிறோம். இவ்வொளி தூய்மையின் புறத்தோற்றம், மயக்கம், அறியாமை முதலியவற்றைப் போக்குவது, இன்பமயமாய் இருப்பது, ஆத்ம சிற்சக்தியின் ஓர் அரிய இயல்பு, எதிர்காலத்தையும், இறந்த காலத்தையும் நிகழ்வில் காண்பது, அரிய நுண்மையான உண்மைகளைக் கணப் பொழுதில் தடீரெனத் தெரிவிப்பது, தெய்வீக சக்தியொன்று திடீரென்று கவிஞரது ஆத்மாவிற் புகுந்து முழுவதும் இடங்கொண்டு பரவசப்படுத்தி, ஒளிப் பிழம்பு ஆக்குகிறது, இந்த ஒளியிலே ஆனந்தக் கனவுகள் நனவுகளாக முன்னிலைப் படுகின்றன. என மதிப்பிடுகின்றார். இம்மதிப்பீடு பாரதியின் முழுப் பரிமாணத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. பாரதியின் அனைத்து வெளிப்பாடுகளையும் இணைக்கும் நூலிழையாக - ஊடுசரடாக - தர்மா வேசமும் சக்தி வேட்கையும், கவித்துவக் கனலும் இளையோடி இருப்பதை நம்மால் உணர முடிகின்றது. இந்திய நாடு அடிமை இருளில் மூழ்கி இருந்த போது பாரதியார் இளஞானியாகத் தோன்றினார். விடுதல வேட்கை கொண்டு விறிட்டெழுந்தார். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விடுதலை உணர்வு பொங்கி எழுந்தது. இந்நிலையில் அடிமை வாழ்க்கையில் இன்பம் காணும் சில ஆத்மாக்களும் இருந்தன. அதனைப் பாரதி

> மண்ணில்இன் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
> மாண்பினை இழப்பீரோ?
> கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
> கைகொட்டிச் சிரிப்பாரோ?..

என்று குமுறியதோடு நாட்டு மக்கள் எல்லோரும் ஓர் இனம், ஓர் குலம் என உயிர்த் துடிப்புமிக்க தேசியப் பாடல்கள் பல பாடினார்.

> எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்
> எல்லாரும் இந்திய மக்கள்
> எல்லாரும் ஓர்நிலை எல்லாரும் ஓர்விலை
> எல்லாரும் இந்நாட்ம மன்னர் ..

எனும் ஒப்பில்லாத சமுதாயத்தை உலகக்கு ஒரு புதுமையாகப் படைக்க வேண்டும் எனக் கனவு கண்டார். இதற்கு நாட்டு விடுதல மட்டும் போதாது, சமுதாய வாழ்விலும் மக்கள் விடுதலை பெற வேண்டும் எனக் கருதினார். சக்தியைத் தெய்வமெனக் கருதி மூழ்கிய அவருக்குப் பெண்கள் ஏட்டைத் தொடுவது தீமையென்று வாழ்வது வேதனை அளித்தது. அதனால் பெண் விடுதலை பற்றிப் பேசுகின்றார்.

> பெண்ணுக்கு விடுதலை என்று இங்கோர்
> நீதி பிறப்பித்தேன்.
> பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லை என்றால்

பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை என்று ஆணையிட்டார். பலர் பசியால் வாடுவதும், அறியாமை இருளில் மூழ்குவதும் கண்டு கொதித்தெழுந்தார்.

> வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
> வாழும் மனிதருக் கெல்லாம்
> பயிற்றுப் பலகல்வி தந்து - இந்தப்
> பாரை உயர்த்திட வேண்டும்.
> தனியொருவருக் குணவில்லை யெனில் - இந்த
> ஜகத்தினை அழித்திடுவோம்

என்றும் வேண்டுகோள் விடுத்தார். இத்தகைய பாடல்கள் ஒவ்வொன்றிலும் நவீன தமிழ்க் கவிதைக்குரிய பண்புகளை மிக நுணுக்கமாகக் கையாண்டிருக்கின்றார் என்பதை அறிய முடிகின்றது. அதமாத்தரமின்றி பாரதி மாபெரும் மனிதாபிமானி என்புதும் புலப்படுகின்றது. இலக்கிய கர்த்தா மனிதாபிமானம் மிக்கவனாக இருத்தல் வேண்டும். மனிதாபிமானம் என்பது துன்பத்தில் உழலும் மக்கள் மீது வெறுமனே கருணை காட்டுவதொ அல்ல, பிரச்சினைகளையும் துன்பங்களையும் நீக்குவதற்கான ஒப்பற்ற ஆற்றல் அம் மக்களிடம் உண்டு என்ற அசையாத நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு வழி வகைகளையும் காட்ட வேண்டும். எனப் பேராசிரியர் க.அருணாசலம் (1984, பாரதியார் சிந்தனைகள், பக்.28) கூறும் கருத்தினைப் பாரதியின் கவிதைகளில் நன்கு காணலாம்.

பாரதி கையாண்ட யாப்பு வகைகளுள் சிந்து மிக முக்கியமானது. ஓர் எதுகை பெற்று, இரண்டு அடிகள் தனிச் சொல் பெற்று, அளவு ஒத்து வருதலும், ஒவ்வாது வருதலும் சிந்து என்னும் யாப்புக்கு உரிய இலக்கணமாகும். இத்தகைய சிந்து யாப்பில் பரிசோதனை முயற்சிகள் செய்து குழந்தைக் கவி பாடினார்.

> சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா
> செல்வக் களஞ்சியமே
> என்னைக் கவிதீர்த்தே - உலகில்
> ஏற்றம் புரிய வந்தாய்..
> ஓடி விளையாடு பாப்பா - நீ
> ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
> கூடி விளையாடு பாப்பா - ஒரு
> குழந்தையை வையாதே பாப்பா..

என்ற பாடல்களுடன் பாரதி காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு முதலிய நிந்து வகைகளில் எல்லாம் பரிசோதனை செய்து பார்த்திருக்கின்றார்.

பாரதி நாட்டின் பழம் பெருமைகளையும் காலம் கடந்து வாழும் பண்புச் சிறப்புக்களையும் வாயாரப் புகழ்ந்து பாடிய பாரதியார், இன்று வாழும் மக்களின் சிறுமைகளையும் மூட நம்பிக்கைகளையும், தவறுகளையும் கடிந்து கூறத் தயங்கவில்லை. குற்றங்களை அழுத்தமாக எடுத்து உணர்த்தும் பாடல்கள் பல உள்ளன. நொண்டிச் சிந்த என்பதைப் பயன்படுத்தி, அதற்கு மெட்டு அமைத்துப் பாடினார்.

> நெஞ்சி பொறுக்கு தில்லையே - இந்த
> நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்
> அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்
> அஞ்சாத பொருளில்லை அவனியிலே
> கொஞ்சமோ பிரிவினைகள் - ஒரு
> கோடி என்றால் அது பெரிதாமோ..
> சாத்திரங்கள் ஒன்று காணார் - பொய்ச்
> சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்தையை நம்பியே
> கோத்திரம் ஒன்றா யிருந்தாலும் - ஒரு
> கொள்கையின் பிரிவதனைக் குலைத்திகழ் வார்...

எனவும், குறைபாடுகளை உடைய பழைய சமுதாயத்தைப் போ பொ போ போ என்றும், குறைகள் நீங்கிய புதிய சமுதாயத்தை வா வா வா என்றும் வரவேற்று மகிழ்கின்றார்.

> சாதி நூறு சொல்லுவாய் போ போ போ
> தருமம் ஒன்று இயற்றிவாய் போ போ போ
> ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
> உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
> தெளிவு பெற்ற மதியனாய் வா வா வா
> சிறுமை கொண்டு பொங்குவாய் வா வா வா

உழவர்கள் பாடுகின்ற நாட்டுப் பாடலாகிய பள்ளுப் பாட்டு என்ற வகையிலும் சுதந்திரப் பள்ளு எனும் பாடலைப் பாடியுள்ளார். அதிலும் இந்த சமத்துவ வாழ்வை வரவேற்றுப் பாடியுள்ளார்.

> பார்ப்பானை ஐயா என்ற காலமும் போச்சே - வெள்ளைப்
> பறங்கியைத் துரை என்ற காலமும் போச்சே.
> உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
> உண்டு களித் திருப்பொரை நிந்தனை செய்வோம்

இதே போல் ஞானப் பாடல்கள் என்ற பகுதி இன்றும் பலரால் விரும்பிப் பாடப்படுகின்றன. பண்டாரங்கள் தெரிவில் பாடித் திரியும் மெட்டில் பாடி இருக்கின்றார்.

> அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
> இச்சகத் துளோர் எல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்
> அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே

என்ற பாடலை வீரம் ததும்பும் நடையில் பாடியுள்ளார்.

புரட்சியிலே கருவுற்று, புரட்சியிலே கிளர்ந்தெழுந்து. மழலை நடை பயின்ற புதுக் கவிதையை தமிழ் இலக்கியத்தில் புகுத்திய பெருமை மகாகவி பாரதிக்குண்டு. இத்தகைய புதுக் கவிதையில் அல்லது வசன கவிதையில் பல பரிசோதனைகள் செய்து பார்த்தவர் பாரதியார் ஆவார். அவர் பாடிய வசன கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டு

> வெம்மைத் தெய்வமெ! ஞாயிறே! ஒளிச் குன்றே!
> அமுதமாகிய உயிரின் உலகமாகிய உடலிலே!
> மீன்களாய்த் தோன்றும் விழிகளின் நாயகமே!
> வலிமையின் ஊற்றே! ஒளி மழையே! உயிர்க்கடலே!...

இவ்வாறு பாரதி, தேச, சமுதாய நலன்கருதி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், கருதிப் பல கவிதைகள் பாடினார். பிறந்த மண்ணின் இயல்புக்கு ஏற்பத் தோத்திரப் பாடல்களைத் தேசியத் துடிப்போடு பாடினார். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் பாடல்கள் படைத்தார்.. எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் ஆகியனவே இப்பாடல்களில் இளையோடி இருந்தன.

பாரதி மறுமலர்ச்சிக் காலத்தின் விடிவெள்ளி, மக்கள் கவி, பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்த புதுமைக் கவி. உருவகக் கவிதை (குதூட்ணீணிடுடிஞி

கணினுட்) என்ற புதிய கவிதை அமைப்பைக் குயில் பாட்டு மூலம் தோற்றுவித்த மூலவர். குழந்தைப் பாடல்கள் உருவாக்கிய மூதல்வர். வசன கவிதையின் தந்தை. கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்ற இரண்டு குறிக்கோள்களையும் இணைத்துப் புதிய கவிதையைத் தோற்றுவித்த சீர்திருத்தவாதி, கவிதை உலகில் பாரதி சகாப்தம் வரலாற்றுப் புகழ் பெற்றது.

பாரதி நவீன தமிழ்க் கவிதையின் உருவம், உள்ளடக்கம் உத்தி ஆகியவற்றில் மரபை மீறியும், புதிய உள்ளடக்கங்களைப் புகுத்தியும், வடிவப் பரிசோதனைகளை நிகழ்த்தியும், எளிமையாக்கங்களை மேற்கொண்டும் நவீன கவிதைக்குரிய பண்புகளை ஆளமாவும் பிரயோகித்த மாபெரும் கவிஞன் பாரதியாவான். பாரதிக்குப் பின்னர் அப்பண்புகளை நன்கு பயன்படுத்தி வந்தவர்கள் பலர் உள்ளனர். அவர்களின் நவீன தமிழ்க் கவிதைகளில் உள்ள நவீன தமிழ் கவிதைகளின் பண்புகளை நோக்கலாம்.

பாரதிக்குப் பின் வளர்ந்த நவீன தமிழ் கவிதையில் நாம் குறைந்த பட்சம் நான்கு கிளைகளை அல்லது போக்குகளை இனங்காண முடியும்.

பாரதிதாசன்.

கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை.

கலைவாணன், ச.து.சு யோகியார்.

பிச்சமூர்த்தி, கு.ப.ரா, புதுமைப்பித்தன்.

ஆகியோரிர் பிரதானமாக இக்கிளையினுள் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றனர். இந்த நான்கு கிளையினரும் பாரதியின் வெவ்வேறு அம்சங்களை, வெவ்வேறு அளவில் பிரதிபலித்தனர். ஆயினும் இவர்கள் யாவருமே பாரதியின் கவி மரபை மேலும் ஒரு உயர்ந்த கட்டத்துக்கு வளர்த்துச் சென்றார்கள் என்று கூற முடியாது. பாரதி வெளிக்காட்டிய ஒரு பார்வை விலாசம், ஒரு மேதாவிலாசம், கவித்துவ வீச்க என்பன அவர்கள் யாரிடமும் காணப்படவில்லை.

பாரதிதாசன் பாரதியாரால் பாராட்டுப் பெற்ற பெருங் கவிஞர். சீர்திருத்த எண்ணங்களும் தமிழுணர்வும் கொண்ட புரட்சிக் கவிஞர். இவர் கவிதைகளில் உணர்ச்சி உச்சம் பெறுகின்றது. இயற்கை வாழ்வு பெறுகின்றது. தமிழ் அபிமானம், சமூகச் சீர்திருத்த நோக்கு ஆகியவற்றைக் கவிதையில் கையாழ்வதில் பாரதியின் வாரிக எனலாம். அவரது நவீன கவித்துவம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள் கட்டுப்பட்டு நான்கு சுவர்களுக்குள் நசுங்கிவிட்டது. எனினும் தமிழ் யாப்பை எளிமைப்படுத்தியதிலும், தமிழ்க் கவிதையில் பேச்சோசைப் பண்பைப் புகுத்துவதிலும், தமிழ்க் கவிதைக்கு ஒரு பரந்த வாசகர் வட்டத்தைப் பெற்றுக் கொடுத்ததிலும் பாரதிதாசனுக்குப் பிரதான இடமுண்டு. பாரதிதாசன் என்ற பெயரில் அமைந்த கவிதைத் தொகுப்புக்கள் நான்கும் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு என்பனவும் இவருடைய உயரிய படைப்புக்களாகும். நகைச்சுவை மிளிரக் கவிதை பாடுதல் என்பது இவருக்குக் கைவந்த கலை. இவரின் பாடல்களில் தமிழ் நாடு, தமிழ் இனம், தமிழ் மொழி என்ற உரிமை உணர்ச்சியை மிகுதியாகக் காணலாம்.

> என்னரும் தமிழ் நாட்டின்கண்
> எல்லோரும் கல்வி கற்றுப்
> பன்னரும் கலை ஞானத்தால்
> பராக்கிரமத்தால் அன்பால்
> உன்னத இமயம வைபோல்
> ஓங்கும் கீர்த்தி எய்தி
> இன்புற்றார் என்று மற்றோர்
> இயம்பக் கேட்டிடல் என்னாளோ?....

என்ற பாடலில் இந்திய நாடு பற்றி இவர் காணும் கனவைக் காணலாம். இந்தியாவுக்குத் தேசிய கீதம் பாடும் போழுது

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு எனக் கவி முழக்கம் செய்கின்றார்.

தொழிலாளர்களையும், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி ஏப்பம்விடும் முதலாளிகளுக்குச் சாட்டையடி கொடுக்கின்றார்.

> சித்திரச் சோலைகளே - உமைநன்கு
> திருந்த இப்பாரினிலே - முன்னர்
> எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தனரோ
> உங்கள் வேரினிலே
> தாரணியே தொழிலாளர் உழைப்புக்குச்
> சாட்சியும் நீ அன்றோ? - பசி
> தீரும் என்றால் உயிர் போகும் எனச் சொல்வலும்
> செல்வர்கள் நீதி நன்றோ?.....

எனவும், புதிய உலகம் அமைப்போம்1 பழைய சீர்கெட்ட அமைப்பை அழிப்போம் என்று எழுச்சியுடனும் பாடுகின்றார்.

> புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
> போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
> மூடத் தனத்தைப் போக்கி - நல்ல
> சமுதாயத்தை ஆக்குவதற்குப்
> பிறந்த குழந்தையல்லவா நீ ..
> என்று பாடுகின்றார்.

பாரதிதாசனின் நடை அவருடைய உள்ளம் போலவே, வேகம் மிகுந்து, பொருள் விளங்காத அருஞ்சொற்கள் அவருடைய பாடல்களில் இல்லை. பாடல்கள் எல்லாம் பலரும் வழங்கும் எளிய சொற்களே, அந்தச் சொற்களுக்கு உயிரூட்டும் வேகத்தையும், ஆற்றலையும் என்னவென்பது. எதையும் உள்ளத்து உணர்ச்சி இல்லாமல் சொல்ல அறியாதவர் அவர். எதையாவது வெறுத்தால் மிகக் கடுமையாக வெறுத்துத் தள்ளுவார். பழித்தால் மிகவும் கடுமையாகப் பழிப்பார். அவருடைய தாக்குதல் வாள்வீச்சைவிடக் கடுமையானது. இவ்வளவு கடுமையும், வேகமும், ஆற்றலும் நிரம்பிய பாடல்கள், பழைய மரபாக வந்த எளிய விருத்தங்கள் அல்லது எளிய சிந்து மெட்டுக்கள் அல்லது சிறு சிறு கண்ணிகள், எளிய பாட்டு வடிவங்களை இவ்வளவு வேகமான உணர்ச்சிகளுக்குப் பயன்படுத்திய அவருடைய திறன் போற்றத்தக்கது. இவை யரவும் நவீன தமிழ்க் கவிதைகளுக்குரிய பண்புகளாகக் கொள்ளப் படுகின்றன.

நவீன தமிழ்க் கவிதைகளின் பண்புகளைக் கையாண்டு பாரதிக்குப் பின்னர் கவிதை புனைந்தவர்களில் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையும் ஒருவராவார். இவரிடம் பாரதியின் மனிதாபிமானத்தின் ஒரு மெல்லிய குரலைக் கேட்கின்றோம். என்றாலும் பாரதி தொடங்கிவைத்த சிறுவர் கவிதையின் வாரிசாகவே அவர் கருதத்தக்கவர். கவிமணி இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளாவிட்டாலும் தேசிய இயக்கத்தின் - குறிப்பாகக் காந்தியக் கொள்கையின் தாக்கம் காரணமாகக் கவிதை புனைந்தவர். குழந்தைகளுக்காக நிறையப் பாடல்கள் புனைந்து, குழந்தை இலக்கியம் பிற்காலத்தில் வளர்ச்சி பெறுவதற்கும் தேசிகவிநாயகம்பிள்ளை காரணமாக இருந்தார். நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமர்கயாம் பாடல்கள், தேவியின் கீர்த்தனைகள், குழந்தைச் செல்வம் என்பன இவருடைய குறிப்பிடத்தக்க படைப்புக்களாகும்.

(அடுத்த வாரம் தொடரும்...)

மட்டு கோம்மாந்துறையில் வயோதிப பெண் ஒருவரின் கழுத்தை வெட்டி தங்க ஆபரணம் கொள்ளை

(கனகராசா சரவணன்)

மட்டு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள கொம்மாந்துறை பிரதேசத்தில் வீடு ஒன்றுளுன் புகுந்த கொள்ளையன் அங்கு தனியாக இருந்த வயோதிப பெண் ஒருவரின் கழுத்தை கத்தியால் வெட்டி அவரின் கழுத்தில் இருந்த 10 பவுண் கொண்ட தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாகவும் அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் திங்கட்கிழமை (2) காலையில் இடம் பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொம்மாந்துறை பகுதியில் தனிமையில் இருந்த 67 வயதுடைய வயோதிபப் பெண் ஒருவரின் வீடடினுள் சம்பவதினமான இன்று காலை 7.30 மணிக்கு துவிச்;சக்கரவண்டியில் தனியாக சென்ற கொள்ளையன் ஒருவன் உப்புகுந்து அவருடன் உரையாடிய நிலையில் அவர் வீட்டினுள் இருந்;து வெளியே வந்ததையடுத்து அவரின் கழுத்தை கத்தியால் வெட்டியதையடுத்து அவர் படுகாயமடைந்ததையடுத்து அவரின் கழுத்தில் இருந்த சுமார் 10 பவுண் கொண்ட தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் தப்பி ஓடியுள்ளாடன்.

இதனையடுத்து வயோதிப பெண் சத்தமிட்டதையடுத்து அயலவர்கள் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்துள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதுடன் அந்த பகுதியில் பெரும் பரபரப்பும் அச்சமும் ஏற்பட்டள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவ இடத்துக்கு சென்ற ஏறாவூர் பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் தடவியல் பிரிவு பொலிசார் மற்றும் மேப்பநாய் வரவழைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்

மட்டக்களப்பில் மகாத்மா காந்தியின் 155 வது ஜனன தினம் அனுஷ்டிப்பு!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜனன தினம் இன்று மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவுத் தூபியில் (02) திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்றது.

மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் தலைவர்கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட முன்னால் முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க.பாரதிதாசன், மட்டக்களப்பு வர்த்தக சங்க செயலாளர் கே.தியாகராஜா உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டிருந்ததுடன், காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதுடன், ??ரகுபதி ராகவ ராஜாராம்?? பாடல் பாடி மரியாதை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் தேரர் போல் நடித்து பண மோசடி செய்தவர் நுவரேலியாவில் கைது

(செ.திவாகரன்)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மல்வத்து மகாநாயக்க தேரரைப்போல் பேசி வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுத்தருவதாக போலியான தகவல்களை வழங்கிய நபர் ஒருவரை நுவரெலியா பொலிஸார் கைது செய்துள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலைய பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பகுதியில் வசிக்கும் ஒருவரினால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் காலி பிரதேசத்தை சேர்ந்த 51 வயதுடையவர் எனவும் தற்காலிகமாக அவர் பிலிமத்தலாவை பகுதியில் வசித்துவருபவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது .

இடம் மற்றும் காணி விற்பனை தொடர்பில் பத்திரிகைகளில் வெளிவரும், விளம்பரங்களில் உள்ள தொடர்பு இலக்கங்களுக்கு மகாநாயக்கதேரரை போன்று தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளார். பின்னர் குறித்த சந்தேகநபர் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுத்தருவதாக கூறி அவர்களிடம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபரிடம் நடத்திய சோதனையில் 11 கையடக்க தொலைபேசிகள் ,120 சிம் கார்டுகள், மின்கலங்கள் உள்ளிட்ட பல இலத்திரனியல் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது . அத்துடன் பல்வேறு அரச அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், மற்றும் கிராம அலுவலகர்களால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள் உட்பட ஏராளமான போலி ஆவணங்கள், வங்கி புத்தகங்கள் மற்றும் வங்கி பற்றுச்சீட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது மேலும் இந்த சம்பவத்தில் மேலும் சிலருக்கு தொடர்பு உள்ளதாஎன்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இவரை இம் மாதம் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான மற்றும் நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சி ஆகியோரின் பணிப்புரையின் பிரகாரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய கட்டளைத் தளபதி பிரதான பொலிஸ் பரிசோதகர் ராஜசிங்க தலைமையில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பல்கலைக் கழகம் செல்லாத மாணவர்களுக்கு சுகாதார அமைச்சு தொழில் தகமை கல்லூரியை ஸ்தாபித்துள்ளது

(வாஸ் கூஞ்ஞ)

பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் 17 வகையான அடிப்படை தொழில்தகமைகல்லூரிகளில் அலவன்ஸுடன்தாதியம் நிறைவு காண் தொழில் வல்லுனர் மற்றும் துணைமருத்துவ பாடநெறிகளைக் கற்பதுடன் கற்று முடிந்தவுடன் உடனடியாக அரச, தனியார் மருத்துவத் துறைகளில் நல்ல சம்பளத்துடன் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் உண்டு என மன்னார் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் உயர் தரத்தில் உயிரியல்இ கணிதத் துறைகளைத் தெரிவு செய்து கற்கும் மாணவர்கள் குறைவு இதனால் வடக்கில் அரச தனியார் சுகாதாரஇ மருத்துவ சேவை நிறுவனங்களுக்குரிய மனித வளங்களுக்கு ஏனைய மாகாணங்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வடக்கில் அரச தனியார் சுகாதாரஇ மருத்துவ சேவை நிறுவனங்களுக்குரிய மனித வளங்களுக்கு பற்றாக் குறை காணப்படுகின்றது.

தொழில்களுக்கு தகமையானவர்கள் இல்லாமையால் வேறு மாகாணங்களில் தங்கியிருக்கும் நிலைமையும் மறுபுறம் தொழில் வாய்ப்புகள் அற்ற துறைகளில் உயர் கல்வியைக் கற்ற பின்னர் வேலைவாய்ப்பின்மைஇ கடன் சுமைகளால் தற்கொலை செய்து கொள்ளும் இளையோரின் எண்ணிக்கையும் வடக்கில் அதிகரித்தும் வருகின்றது.

வடக்கில் உள்ள மாணவர்கள் உயிரியல்இ கணிதத் துறைகள் சித்தியடைவதற்கும்இ பல்கலைக் கழகம் செல்வதற்கும்

கடினமான துறைகள் அல்ல என்பதனை மீண்டும் ஒருமுறை 2022/23 உயர்தர பெறுபேறுகள் நிரூபித்துள்ளன.

பாடசாலை மாணவர்களில் உயிரியல் துறையில் வடமாகாணம் அதிகூடிய சித்தி விதத்தையும் கணிதத் துறையில் இரண்டாவது அதிகூடிய சித்தி விதத்தையும் 2022/2023 உயர்தரப் பெறுபேறுகளில் நிலைநாடியுள்ளது.

உயிரியல் துறையில் உயர்தரம் கற்று உயர்தரத்தில் 3ஸு பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் 35 வகையான பாடநெறிகளை கற்கக் கூடிய நிலைமை 2021/2022 இருந்தது. இது இந்த 2022/2023 இல் மேலும் அதிகரிக்கும்.

ஒருவேளை பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சினால் நடத்தப்படும் 17 வகையான அடிப்படை தொழில்தகமை கல்லூரிகளில் அலவன்ஸுடன் தாதியம்இ நிறைவு காண் தொழில் வல்லுனர் மற்றும் துணைமருத்துவ பாடநெறிகளைக் கற்பதுடன்இ கற்று முடிந்தவுடன் உடனடியாக அரசஇ தனியார் மருத்துவத் துறைகளில் நல்ல சம்பளத்துடன் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் உண்டு.

எனவே இது தொடர்பில் பெற்றோர்கள்இ மற்றும் கல்விச் சமூகத்தினர் சிந்தித்து மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக வைத்திருக்கவல்ல பாடநெறிகளை உயர்தரத்தில் தெரிவு செய்து மாணவர்கள் கற்பதனை ஊக்குவிக்க முன்வரவேண்டும் என அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தினை ஒக்டோபர் 3 ஆம் திகதி பொதுமக்கள் பார்வையிடலாம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 42ஆவது வருடத்தை முன்னிட்டு ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் 8ஆம் திகதி வரை பல்வேறு நிகழ்வுகளுடன் கூடிய பல்கலைக் கழக வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் கனகசிங்கம் வல்லிபுரம் (27) பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

இப்பல்கலைக்கழக வாரத்தை விசேடமாகக் கொண்டாடும் நோக்கில் பல்கலைக்கழக வரலாற்றில் முதல் தடவையாக பிராந்தியத்திலுள்ள சமூகத்தினருக்காக எதிர்வரும் ஒக்டோபர் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமையினை திறந்த நாளாக நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகம் பிராந்திய அபிவிருத்திக்கான ஒரு இயந்திரமாகவும், மத்திய நிலையமாகவும் கடமையாற்றும் ஒரு மத்திய நிலையமாயகும். 2023 இல் பிரகடனப்படுத்தப்பட்டள்ள இத்திறந்த நாள் பொதுமக்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டு, கல்வி சார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்வி பயிலும் பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடி தற்போது பல்கலைக்கழகம் வழங்கும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களையும் அறிந்து கொள்வதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பத்தினை ஒக்டோபர்3ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் உபவேந்தர் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், சிறு முயற்சியாண்மையாளர்கள், விவசாயிகள், மீன்பிடித் தொழிலாளர்கள், சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்கள், என பல்கலைக்கழகத்தைப் பார்வையிடுவதற்கு ஆர்வமுள்ள சகலரும் பங்குபற்றி கிழக்கும் பல்கலைக்கழம் தொடர்பான தெளிவினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திறந்த நாளில் தொழில் வழிகாட்டல் மற்றும் உளவளத்துறை ஆலோசனை, விஞ்ஞான ரீதியான பரிசோதனைகளும், பிரயோக விளக்கங்களும், கல்வி சார் சூழல் தொடர்பான பூரணமான அவதானம், வாசிகசாலை வசதிகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், பல்கலைக்கழக அனுமதி தொடர்பான அணுகுமுறைக்கான வழிகாட்டல்கள் மற்றும் பல்கலைக்கழகம் மற்றும் கல்வி சார் அனுபவப் பகிர்வுகள் போன்ற விடயங்கள் தொடர்பான தெளிவான விளக்கங்கள் இத்திறந்த நாளில் வழங்கப்படவுள்ளதாகவும் இவ்வூடகவியளாலர்களின் சந்திப்பின் போது உபவேந்தர் பேராசிரியர் கனகசிங்கம் வல்லிபுரம் மேலும் தெரிவித்தார்.

நாளை பாடசாலைகளில் தேசிய மீலாதுந் நபி விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நாடு முழுவதிலும் உள்ள முஸ்லிம் பாடசாலைகளிலும் முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலும் முஸ்லிம் சமய விழுமியங்களை மேம்படுத்தும் வகையில் நாளை (04) புதன்கிழமை மீலாதுந் நபி விழா கொண்டாடப்படுதல் வேண்டும் என வலியுறுத்துகிறேன் என்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் என்.எஸ். மலவிஆராச்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இவ் விழாவினைக் கொண்டாடுவதனூடாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் சுபீட்சம் மற்றும் சௌபாக்கியம் கிடைக்கப் பெற பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்கள் இவ்விடயம் பற்றி சகல ஆசிரியர்களுக்கும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் முன்கூட்டியே தெரியப்படுத்துவதுடன் பாடசாலையில் மீலாதுந் நபி விழா நடத்தப்படும் விதம் தொடர்பாகத் தீர்மானித்து பாடசாலையின் சகல மாணவ, மாணவிகளுக்கும் அது பற்றி அறிவித்தல் வேண்டும். இவ்விழாவில் மதகுருமார், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாராஉத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை சமூகம் சார்ந்தவர்களைப் பங்கு பற்றச் செய்து கல்வி நடவடிக்கைகளுக்கு பாதகமில்லாதவாறு நடத்தப்படுதல் வேண்டுமெனவும் வலியுறுத்துகிறேன். அவ்வாரத்தில் பாடசாலையும் பாடசாலை சூழலும் சுத்தம் செய்யப்பட்டு, இஸ்லாமியக் கலை அம்சங்களுடன் நேர்த்தியான முறையில் அலங்கரிக்கப்படுதல் சாலச் சிறந்ததாகும்.

2023 ஆம் ஆண்டு ஒரேநாளில் தேசிய ரீதியில் மீலாதுந் நபி விழாவினை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான தேசிய மீழாதுந் நபி விழாவை வெற்றிகரமாக நடத்துமாறு கல்வி அமைச்சினால் சகல பாடசால அதிபர்களுக்கும் சுற்றுநிருபத்தின் மூலம் 2023/08/29ஆம் திகதியன்று வேண்டுகோள் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறுவர் தினத்தில் சகல மாணவர்களுக்கும் உணவளித்த ஆசிரியர்கள்!

(காரைதீவு சகா)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வில் பாடசாலையில் பயில்கின்ற சகல மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மதியபோசனத்தை மனமுவந்து வழங்கினார்கள்.

இந்நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில் உள்ள நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நேற்று(2) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது .

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.. பிரதம அதிதியாக பாடசாலை இணைபாளரும் உதவி கல்வி பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

அங்கே மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு நடந்தது .குறிப்பாக கயிறுஇழுத்தல் போட்டி, சங்கீதக் கதிரை , சங்கீத தொப்பி மற்றும் பாடல் பேச்க என்பன இடம் பெற்றன .

வெற்றி பெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதியில் 500 மாணவர்களுக்கும் புறியாணி போசனம் ஆசிரியர்களின் முழுப் பங்களிப்போடு இடம் பெற்றது.

இரவல் தாய்நாடு படைத்த எழுத்தாளுமை சே.யோகநாதன்:

தழிழ்த் தேசியத்தில் பற்றுள்ள முற்போக்கு படைப்பாளி

(பல நூறு புதினங்களை எழுதிய செ. யோகநாதன் அக்டோபர் 1, 1941 இல் பிறந்த ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளராவார். அவரின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

எந்த ஒடுக்குமுறையும், அது சமூக ஒடுக்குமுறையாக இருந்தாலென்ன, தேசிய இன ஒடுக்குமுறையாக இருந்தாலென்ன, அதை எதிர்த்துப் போராடுவது ஒன்றுதான் எழுத்தாளனின் பொறுப்பாக உள்ளது. இந்தப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டியது ஒரு எழுத்தாளனின் இன்றியமையாக் கடமை என்றே எண்ணுகிறேன். தம்மைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்வை அவதானித்துப் பயின்று அவர்களின் சிந்தனையைத் தூண்டிச் செயற்படுத்தும் விதத்திலே எழுத்து அமைய வேண்டும்' என 'கிட்டி' நாவலின் முன்னுரையில் செ. யோகநாதன் எழுத்தாளனின் கடமையை வலியுறுத்தியுள்ளார்.

பெருமளவு சிறுகதைகளையும் குறும் புதினங்களையும் எழுதிய செ. யோகநாதன் அக்டோபர் 1, 1941 இல் பிறந்த ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளராவார். புனைவுகள், கட்டுரைகள், மொழிப்பெயர்ப்புகள், குழந்தை இலக்கியம் என தொன்னூறுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார்.

ஈழகேசரியின் மாணவர் மலருக்கு கவிதைகள், கட்டுரைகள் எழுதிப் பரிசுகள் பெற்றவர். 1962 இல் சிற்பியின் கலைச்செல்வி இதழில் இவருடைய முதற்கதை வெளியானது. இதனை அடுத்து இவரது 'மலர்ந்த நெடு நிலா' என்ற குறும் புதினமும் கலைச்செல்வி வெளியானது.

ஈழத்து இலக்கியத்துறையில் முன்னோடிகளில் ஒருவராகவும் விளங்கியவர்.

சிறுகதை, நாவல், நாடகம், சினிமா என பல்துறையிலும் ஈடுபாடு கொண்டு கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் என பல பத்திரிகைகளிலும் செ. யோகநாதன் எழுதி வந்தவர். ஈழத்தில் மட்டுமல்லாது தமிழகத்திலும் பல ஆண்டுகள் கலைப் பணியாற்றியவர்.

தழிழ்த்தேசியத்திலும் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்ட இவர். ஐந்து தடவைகள் இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசு பெற்றவர். தமிழகத்திலும் தழிழக அரசின் பல விருதுகளைப் பெற்றதோடு முதல்வர் கலைஞர் கருணாநிதியாலும் பாராட்டும் பரிசும் பெற்றவர்.

கொழும்புத்துறை பிறப்பிடம்:

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகநாதன் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் கண்டியில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் இலங்கை நிர்வாகச் சேவையில் தேர்ச்சி பெற்று மட்டக்களப்பு, பூநகரி ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார்.

மார்க்சிய சித்தாந்தத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். 1960களில் தமிழ்நாடு சென்று அங்கு பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து 1996 இல் இலங்கை திரும்பினார். இறுதியாக கொழும்பில் உள்ள எம். டி. குணசேனா நிறுவனம்

தமிழ் நூல்கள் வெளியிடத் தொடங்கிய போது அதற்குப் பொறுப்பாளராகப் பதவி ஏற்றார்.

மக்களின் மொழியிலே எழுதப்பட வேண்டும். மக்களுக்கு எதிரான சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக எழுத வேண்டும். இலக்கியமென்பது வெறுமனே தனக்கு எதிரிலே நடந்தவற்றைப் பதிவு செய்கிற ஒன்று என்பதை நான் என்றுமே ஒப்புக் கொண்டதில்லை. அதற்கும் மேலாகப் போய் வாசகன் மனதில் ஒரு செய்தியை அல்லது செயலக்கான ஊக்கத்தை அது பதிவு செய்தாக வேண்டும்.

படைப்பாளி தனது மக்களின் வாழ்வையும், உணர்வுகளையும், காலத்தையும் பதிவு செய்கின்றவன். இப்படிப் பதிவு செய்தே தனது எழுத்தை அவர்களின் போராட்டத்துக்குரிய ஆயுதமாக மாற்றிவிடுகிறான். என 'கிட்டி' நாவலின் முன்னுரையில் செ. யோகநாதன் எழுத்தாளனின் கடமையை வலியுறுத்தியுள்ளார்

பேராதனைப் பல்கலை மாணவன்:

பேராதனைப் பல்கலைக்கழக மாணவனாக இருந்த 1964 ஆம் ஆண்டில் இவரது பத்துச் சிறு கதைகளைக் கொண்ட யோகநாதன் கதைகள் சிறுகதைத் தொகுதி முதலில் வெளி வந்தது. அஞ்சலி இதழில் வெளிவந்த ஒளி நமக்கு வேண்டும் குறுநாவல் 1974 இல் நூலாக வெளிவந்து இலங்கை சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. பின்னர் பல மொழிகளில் இது மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் தமிழக இதழ்களில் நிறைய சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள் எழுதினார்.

ஈழத்தமிழுலகு நன்கு தெரிந்த படைப்பாளி செ.யோகநாதன் உண்மையிலேயே தமிழுலகம் நன்கு அறிந்த படைப்பாளி என்றே கருதலாம்.

செ.யோகநாதன் ஆயிரத்து தொழாயிரத்து அறுபதுகளில் ஆற்றல் மிக்க இளம் எழுத்தாளனாக உருவெடுத்தது எல்லோருக்கும் தெரிந்ததே. அவரை உருவாக்கிய பெருமை பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு உரியது. யோகநாதன் அவர்கள் கைலாசபதி அவர்களோடு மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவர் பல்கலைக்கழகத்திற்கு வந்த காலத்தில் இருந்தே அங்கு ஒரு புதிய இலக்கியக் குரல் ஒலிக்கத் தொடங்கியது என மூத்த எழுத்தாளர் செங்கை ஆழியான் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மத்திய அரசு விருது:

செ. யோகநாதன் இந்திய மத்திய அரசின் பரிசு உட்பட தமிழக அரசின் விருதினை நான்கு தடவைகள் பெற்றுள்ளார். உயர் இலக்கிய விருதான இலக்கியச் சிந்தனை விருதினையும் நான்கு தடவைகள் பெற்றுள்ளார். இலங்கை சாகித்திய விருது நான்கு தடவை கிடைத்துள்ளது. 1994 இல் இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் என்று ஒவ்வொன்றும் 650 பக்கங்கள் கொண்ட வெள்ளிப் பாதசரம், ஒரு கூடைக் கொழுந்து ஆகிய இரண்டு தொகுதிகளை வெளியிட்டார்.

குழந்தை இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு காட்டிய செ.யோ அத்துறையில் பல நூல்களை எழுதியதுடன் மூன்று சிறுவர் சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ்த் திரைப்படத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் இணை இயக்குநராகவும் செயற்பட்டார்.

அத்துடன் பேராதனை பல்கலைக் கழகத்தில் இருந்தோரோடு, பல்கலைக்கழகத்துக்கு வெளியே தெணியான், தெளிவத்தை யோசப், பௌடிக்ட் பாலன் போன்ற எழுத்தாளர்களும் ஈழத்து சிறுகதை இலக்கியத்தை அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்துச் சென்றனர் என்பது முக்கியமான சங்கதியாகும்.

பல்கலைக்கழகத்தில் இருந்தபோது பல்கலைக் கழக வெளியீடாக வந்த கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள், யுகம் ஆகிய சிறுகதைத் தொகுதிகளில் செ.யோகநாதன் அவர்களுடைய கதைகள் வெளிவந்திருக்கின்றன. பேராதனைப் பல்கலைக்கழகம் 1960, 64 களில் வெளிக்கொண்ர்ந்த முக்கிய படைப்பாளிகளில் யோகநாதனும் ஒருவர் என்பதை எவரும் மறுக்கமுடியாது என மூத்தஎழுத்தாளர் செங்கை ஆழியான் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார்.

இன மொழி உணர்வு மிக்கவர்:

முற்போக்கு இலக்கியம் வாழ்வின் அடிநிலையிலிருக்கிற ஒடுக்கப்பட்ட மக்களையும், அவர்களைவிட சற்றுமேலே, ஆனால் அடிமைத் தனங்களில் உழல்கிற மானிடர்களையும் சித்தரிப்பதும், அவர்களை கைப்பிடித்து முன்னே கூட்டிச் செல்வதுமாகவும் உள்ளதை இலக்காகக் கொண்டவை.

அடிப்படையில் இந்த எழுத்தின் வேர்கள் சேற்றிலும், சகதியிலும், வியர்வையிலும், இரத்தத்திலும், ஒடுக்குமுறைக்கு எதிரான சொல்லிலும், செயலிலும் ஆழப் பதிந்திருக்கின்றன என 'சுபமங்களா' இதழில் வெளிவந்த நேர்காணலில் முற்போக்கு இலக்கியம் குறித்து செ.யோகநாதன் தெளிவுபடுத்தியுள்ளார்.

வீரார்ந்த மூச்சோடு எதிர்க்குரல் கொடுக்கின்றன. இவை இந்த மக்களின் உயிர்த்துடிப்புள்ள மொழியை அப்படியே சொல்கின்றன. இந்த மக்களின் மொழி நீண்ட நெடுங்காலமாக இந்த மக்களால் பேசப்பட்டு, வளமைப் படுத்தப்பட்டு, செம்மையுற்று செழுமைப்படுத்தப்பட்டது என 'சுபமங்களா' இதழில் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்தாளர் செ.யோகநாதன் அவர்கள் ஆரம்பத்திலேயே இன உணர்வு, மொழி உணர்வு மிக்கவராக தமிழரசுக் கட்சியின் பால் கவரப்பட்டவர். தன்னுடைய இரத்தத்தை எடுத்து கூட்டத்திலே தேவராஜா என்பவரைக் கூப்பிட்டுக் கொடுத்து தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குப் பொட்டு வைத்த தொண்டராகவும் அவர் இருந்திருக்கின்றார். ஆனால் பின்னர் தீண்டாமை ஒழிப்பு



இயக்கத்தில் ஈடுபடத்தொடங்கியதும் ஒரு மார்க்சிய முற்போக்குவாதியாகி தேசியம், மண்வாசனை, யதார்த்தம் ஆகிய கரிசனைகளுக்கு உட்பட்டிருந்தார்.

அவர் மார்க்சிய முற்போக்குவாதியாகக் கடைசிவரை வாழ்ந்திருக்கின்றார்.

1983 இலே தமிழ்த் தேசியவாதம் இவரின் கதைகளில் ஆழவே வேரூன்றி உள்ளதைக் காணலாம். இதில் மூன்று நிலை அவரிடம் இருந்திருக்கின்றது. முதலில் சமஷ்டி நிலையில் இருந்திருக்கின்றார். பிறகு கம்யூனிஸ்ட் கட்சி முற்போக்கு எழுத்தாளராக இருந்திருக்கின்றார். பிற்காலத்திலே தமிழ்த் தேசியம் அவரது கதைகளிலே ஆழவே வேரூன்றி இருப்பதைக் காணலாம்.

எவ்வாறாயினும் யோகநாதனின் கதைகள் சமூக வாழ்க்கை விமர்சனங்களாக விளங்குகின்றன. தமிழ்த் தேசிய உணர்வுக் காலகட்டத்தில் ஈழத்துச் சிறுகதை உலகிற்கு காத்திரமான பங்களிப்பாக அமைவன யோகநாதனின் கதைகளாகும். ஈழத்து வாழ்க்கைப் பிரச்சனைகளின் மையங்களை இனங்கண்டு வார்த்தைகளில் உணர்வோடு பதிய வைத்திருக்கின்றார்.

தமிழகப் பத்திரிகைகளில் படைப்புகளால் அரசேச்சிய காலத்தில் எழுதிய 'என்று தணியும்', 'அகதி', 'வீழ்வேனென்று நினைத்தாயோ', 'அன்னையின் குரல்', 'தேடுதல்', 'சரணபாலாவும் சின்னக்குட்டியும்', 'இன்னொரு மனிதன்', 'அவர்களின் மகன்' , 'அடிமைகள் இல்லாத இடத்தில்', 'பூ முதிரை' முதலான சிறுகதைகளின் சிருஷ்டிகர்த்தாவாக, தமிழீழப் போராட்ட காலத்தில் இந்திய அமைதி காக்கும் படை நடாத்திய நடவடிக்கைகளையும், இலங்கை இராணுவத்தின் அட்டூழியங்களையும், போராளிகளின் தியாகங்களையும், அரச பயங்கரவாதப் போக்குகளையும், தமிழ் மக்களின் அகதி வாழ்வின் அவலங்களையும் இன ஒடுக்கல் நடவடிக்கைகளையும், சாதிப்பிரச்சனைகளையும் யோகநாதன் சிறுகதைகளாக உள்ளடக்கிக் கொண்டுள்ளார் என எழுத்தாளர் செங்கை ஆழியான் இவரின் ஆற்றலை விபரித்துள்ளார்.

'இரவல் தாய்நாடு'

தமிழகத்திலே இவர் எழுதாத பத்திரிகைகளே கிடையாது. எழுத்தாளர் அமரர் தி.ஜானகிராமன் அவர்கள் நினைவாக கணையாழி பத்திரிகை நடாத்திய குறுநாவல் போட்டியிலே 'இரவல் தாய்நாடு' என்ற படைப்பை எழுதினார். உண்மையிலேயே எழுத்துலகில் அற்புதமான ஒரு குறுநாவல் இது.

அதற்குப் பிறகு தான் தமிழகமே விழித்துக் கொண்டு, ஒரு அற்புதமான படைப்பாளி இலங்கையில் இருந்து தமிழகம் வந்து தம்மிடையே இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்ட காலகட்டம் அதுதான்.

அந்த இரவல் தாய்நாடு என்ற குறுநாவலைப் படித்துவிட்டுத்தான் கலைஞர் கருணாநிதி கூட அவரோடு தொடர்பு கொண்டார். கலைஞர் கருணாநிதி எழுதிய 'பாயும் புலி பண்டாரவன்னியன்' என்ற கதையைக் கூட யோகநாதன்தான் தேவையான ஆவணங்களை எடுத்துக் கொடுத்தார் என்பது அவர் எழுதிய கடிதத்தில் இருந்து புரியக் கூடியதாக இருக்கின்றது. பாயும் புலி பண்டாரவன்னியன் ஓர் அற்புதமான நாவலாக உருவாகுவதற்கு யோகநாதன் மூல காரணமாக இருந்திருக்கின்றார்.

யோகநாதன் எழுதிய 'கண்ணீர் விட்டோ வளர்த்தோம்' என்பது மிக முக்கியமான இன்னோரு சிறுகதைத் தொகுதி. அது இந்தியாவிலே வெளிவந்தது. இதற்காக இந்திய இலக்கியச் சிந்தனை, எழுத்தாளர் பேரவை எல்லாம் அவருக்கு பரிசளித்துக் கௌரவித்தன.

ஈழத்துச் சிறுகதைத் துறையிலே செ.யோகநாதனின் பாரிய பங்களிப்பாக விளங்குவது, அவர் தமிழகத்திலே வாழ்ந்த காலத்திலே 'இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்' என்ற இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளை ஈழத்தின் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்டு வெளியிட்டார். ஆயிரம் பக்கங்களுக்கு மேல் இரண்டு பெரிய சிறுகதைத் தொகுதிகளாக, அவர் தமிழகத்தில் இருந்தபோது வெளியிட்டிருக்கின்றார்.

தான் மட்டும் வாழ்ந்தால் போதுமென்று நிற்காது, ஈழத்திலே மறந்து கிடந்த எழுத்துலகச் சிற்பிகளை எல்லாம் அதிலே அவர் அறிமுகப்படுத்தி யிருக்கின்றார். 'வெள்ளிப்பாதரசம்' ஒரு தொகுதி, 'ஒரு கூடைக் கொழுந்து' இன்னொரு தொகுதி இந்த இரண்டு தொகுதிகள் மூலம் ஈழத்தைச் சேர்ந்த குறைந்தது ஐம்பது எழுத்தாளர்களை யாவது அவர் தமிழகத்திலே அறிமுகம் செய்திருக்கின்றார். இதன் மூலம் ஒரு சிறந்த ஒரு படைப்பாளியாக அவர் தொழிற்பட்டிருக்கின்றார் என்பதாகவே நான் சொல்லுவேன் என எழுத்தாளர் செங்கை ஆழியான் வழங்கிய ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கூடைக் கொழுந்து :

இதுவரையில் யோகநாதன், கண்ணீர் விட்டோ வளர்த்தோம், தேடுதல், இத்தனையும் ஒரு கனவாக இருந்தால், அண்மையில் ஒரு நட்சத்திரம், அந்திப் பொழுதும் ஐந்தாறு கதைகளும், அவளுக்கு நிலவென்று பேர், கனவு மெய்ப்படும், ஒரு சொல், மாசறு பொன்னே, வீழ்வேனென்று நினைத்தாயோ?, விநோதினி, இன்னும் இரண்டு நாட்கள், அன்னை வீடு, கண்ணில் தெரிகின்ற வானம், அசோகவனம், மூன்றாவது பெண், காற்றினில் ஏறி விண்ணையும் சாடலாம் என 16 சிறுகதைத் தொகுதிகள் எழுதி வெளியிட்டுள்ளார்.

இச்சிறுகதைத் தொகுப்புகள் , ஈழத்தில் நடைபெறும் விடுதலைப் போரைமட்டுமின்றி, உலகம் முழுவதிலும், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் நடந்த, நடைபெறும் - நடைபெறவிருக்கும் ஒடுக்கு முறைகளுக்கும், சுரண்டல்களுக்கும் எதிரான, தேசிய விடுதலைப் போராட்டங்களின் அவசியத்தையும், அனுகூலத்தையும் நமக்கு எடுத்து விளக்குவதாக அமைந்துள்ளது என 'வீழ்வேனென்று நினைத்தாயோ?' என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு எழுதிய முன்னுரையில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பதிவு செய்துள்ளார்.

தமிழீழப் போராட்டச் சூழலில் இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகளையும், இலங்கை இராணுவத்தினரின் அட்டூழியங்களையும், அரச பயங்கரவாதப் போக்குகளையும், தமிழ் மக்களது அகதி வாழ்வின் அவலங்களையும், போராளிகளின் தியாகங்களையும், இனவொடுக்கல் நடவடிக்கைகளையும், சாதிப்பிரச்சனைகளையும், பெண்கள் மீதான கொடுமைகள் மற்றும் சுரண்டலையும், குழந்தைத் தொழிலாளர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களது உழைப்புச் சுரண்டல்களையும் செ. யோகநாதன் தமது சிறுகதைகளின் உள்ளடக்கமாகக் கொண்டு படைத்துள்ளார்.

அரசியலென்ற கட்டுமானத்தின் மேலேதான் யாவும் அமைகின்றன. நாறிப் போய், இற்று விழுந்து கொண்டிருக்கின்ற சமூகத்தில் வலிமை வாய்ந்த சிற்றுளியாக இந்தக் கலை இலக்கியமென்ற மறைமுக அரசியல் இயங்க முடியும். அத்தகைய சிற்றுளிகளாக இன்றைய இலக்கியப் படைப்பாளி விளங்குவான். அவன் நாளைய நிர்மாணத்தை செதுக்குவதோடு இன்றைய நிர்வாண கலாச்சாரத்தை அடித்து துவைத்து அழிந்து போக வைப்பான். அத்தகைய படைப்பாளி, தனித்திருந்து வாழும் தவமணியாக இராது மக்கள் கூட்டத்தோடு நின்று அவர்களின் குரலில் கலந்து ஒலிப்பான் என செ. யோகநாதன் தமது சிறுகதைகளின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

மானுட மேன்மை நிலை நிறுத்தியவர் :

நான் சகலவித ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மானுட மேன்மையை நிலை நிறுத்த விரும்புகிறேன். இதை என் எழுத்தாக்குகிறேன். எழுத்து என் அரசியல்.



என் ஆயுதம், என் சுவாசம் என 'காற்றின் குழந்தைகள்' என்ற சிறுவர்க்கான நூலில் தமது இலக்கியக் கொள்கையை, படைப்பாளியின் பணியை செ. யோகநாதன் எடுத்துரைத்துள்ளார்.

இவரது நூல்களில் சில : யோகநாதன் கதைகள் (சிறுகதைகள், 1964)

இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும் (குறுநாவல் தொகுதி)

ஒளி நமக்கு வேண்டும் (ஐந்து குறுநாவல்கள், 1973)

காவியத்தின் மறுபக்கம் (மூன்று குறுநாவல்கள், 1977)

வீழ்வேன் என்று நினைத்தாயோ? (சிறுகதைகள், 1990)

அன்னைவிடு (சிறுகதைகள், 1995)

கண்ணில் தெரிகின்ற வானம் (சிறுகதைகள், 1996)

அசோகவனம் (சிறுகதைகள், 1998)

அன்பான சிறுவர்களே(குழந்தைக் கதைகள், 2000)

சகலவித ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மானுட மேன்மையை நிலை நிறுத்த விரும்பிய செ. யோகநாதன் 2008, சனவரி 28இல் மாரடைப்பினால் தனது 66-வது அகவையில் காலமானார்.

திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 31

மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூஷணம் ஹாஜியானி றாகிலா மஜீத் நூன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்.

கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பல்வேறு வகையான பாணிகளிலும், நுட்பங்களிலும் எழுதப்பட்ட சொற்களைப் பயன்படுத்துபவர்களே எழுத்தாளர்கள். இவர்கள் நாவல்கள், சிறுகதைகள், குறுங்கதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைக்கதைகள் மற்றும் கட்டுரைகள் போன்ற பல்வேறு வகையான இலக்கியக் கலை வடிவங்களையும் மற்றும் படைப்பாக்க எழுத்துக்களையும் உருவாக்கி வருபவர்களாவர். அத்தகைய எழுத்தாளர்களில் இன்று பெண் எழுத்தாளர்களின் வருகையும், அவர்களின் படைப்பாக்க சிந்தனையும் உலகளவில் பேசப்பட்டு வருகிறது.

அவ்வகையில், இலங்கையில் குறிப்பிட்டு சொல்லக் கூடிய முஸ்லீம் பெண் எழுத்தாளர்களில் ஒருவரான இவர் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தின் பெரியாற்று முனை எனும் இடத்தில் 1949 ஆம் ஆண்டு சாகுல் கமீது ஐனூன் வீவி தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்து தற்போது முள்ளிப்பொத்தானையின் ஈச்சநகர் எனும் இடத்தில் வசித்து வருகின்றார். சர்வோதயத்தால் முன்னெடுத்து வந்த முள்ளிப்பொத்தானை பாலர் பாடசாலையில் முன்பள்ளி ஆசிரியையாக 4வருடங்கள் பணியாற்றி வந்த இவர் கிண்ணியா மகளிர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவியும் ஆவார். இவர் சிறுவயதிலிருந்தே வானொலி நிகழ்ச்சிகளை கேட்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டதோடு நிகழ்ச்சிகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில்களை அனுப்பி பரிசில்களையும் பெற்று வந்தார். அதன் தொடர்ச்சியாக, எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்டு பாடசாலை மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு கவிதை, கட்டுரை, சிறுகதை, இஸ்லாமியப் பாடல்கள் போன்றவற்றை எழுதி வெற்றி பெற்றதோடு பாடல் போட்டிகளிலும், பேச்சு போட்டிகளிலும் கலந்து கொண்டு இலக்கியத் துறையின் பயணத்திற்குள் தன்னை அடையாளம் காட்டினார். இவ்வாறாக தன்



எழுத்தாற்றல் திறமையை வெளி உலகிற்கு அடையாளம் காட்டும் வண்ணம் 1966இல் வீரகேசரி பத்திரிகையின் முஸ்லீம் சுடர் என்ற பகுதிக்கு 'இஸ்லாத்தின் சிறப்பியல்புகள்' என்ற கட்டுரைத் தொகுப்பை முதல் ஆக்க படைப்பாக எழுதி இலக்கிய உலகிற்குள் காலடி எடுத்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வீரகேசரி, தினபதி, சிந்தாமணி, தினமுரசு, தினகரன், விடிவெள்ளி போன்ற பத்திரிகைகளிலும் ஞானம், சுவைத்திரன் சஞ்சிகைகளிலும் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், பாடல்கள், நாடகங்கள் எனப் பல்வேறு துறை சார்ந்த வடிவங்களை எழுத்தாக்கமாக ஆரம்ப காலங்களில் 'கிண்ணியா செல்வி' என்ற புனைப் பெயரிலும் பின்னர் தனது சொந்தப் பெயரிலும் எழுதி வருகின்றார். இவரது படைப்புகள் சிறுவர் மலர், மங்கையர் மஞ்சரி, மாதர் நிகழ்ச்சி என பல வானொலி நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பாகியமை குறிப்பிடத்தக்கது. எழுத்துத் துறை தவிர, பாடல்களை இயற்றும் வல்லமையும் கொண்டதோடு இவரால் இயற்றப்படும் பாடல்களை மெட்டுக்கே பாடும் திறமையும் கொண்ட பல்துறையிலும் ஆளுமைமிக்க பெண்மணி ஆவார்.

இலகுவான மொழி நடையிலும், சமூகம் சார்ந்த விடயங்களை யதார்த்தமாக கூறியும் இன்று வரை தனது தடம் புரளாத தனித்துவம் நிறைந்த எழுத்தாண்மையுடன் வலம் வருகின்ற பல்துறை எழுத்தாளரான இவர்

'அரங்கேறும் கவிதைகள்', 'இல்லத்தரசிகளும் இல்லற வாழ்வும்', 'சிந்தனை முத்துக்களும், வாழ்வியற் தத்துவங்களும்', 'அனாவின் வண்ணத்துப்பூச்சி','நபி வழியில் நாம்' என்ற ஐந்து நூல்களின் சொந்தக்காரியாவார்.

இவரது கணவரான காலஞ்சென்ற மஜீத் நூன் சீனடி சிலம்படி கலையில் கலாபூஷணம் விருதைப் பெற்றவருமாவார். ஏழு பிள்ளைகளின் தாயான இவர் எழுத்துலகில் கொண்ட தீராத தாகத்தால் இன்று வரை திருகோணமலை மாவட்ட செயலகத்தினாலும், தம்பலகாமம் பிரதேச செயலகத்தினாலும் நடாத்தப்படும் இலக்கியத்துறை சார்ந்த பல போட்டிப் பிரிவுகளிலும் பங்கு கொண்டு வெற்றி பெற்று வருகிறார். இவ்வாறாக ஈழத்து இலக்கியப் பரப்பில் 50வருடங்களுக்கு மேலாக பல்துறையில் பெண் எழுத்தாளராக தன்னை அர்ப்பணித்து தனது எழுத்தாக்கம் மூலமாக காத்திரமான இலக்கியப் பணியை முன்னெடுத்து வருபவரான மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூஷணம் ஹாஜியானி றாகிலா மஜீத் நூன் கலைஞர் சுவீட்சம் நிகழ்நிலை பத்திரிகையின் 'திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை' என்ற பகுதிக்கு வழங்கிய செவ்விகாணல் இங்கு எமது வாசகர்களுக்காக....

? எழுத்துத் துறையில் எவ்வாறு பிரவேசித்தீர்கள்? உங்களது எழுத்துத்துறை பயணம் குறித்து கூறுவீர்களா?

சிறுவயதிலிருந்தே வானொலி நிகழ்ச்சிகளை அதிகமாக கேட்பதில் ஆர்வம். அத்துடன் எனது சிறிய தந்தையும், மூதூரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தகவல் ஒளிபரப்பில் உதவி அமைச்சராகவும் இருந்த மறைந்த அப்துல் மஜீத் அவர்களின் இலக்கிய ஆளுமையும், பன்முகப் பார்வையும், தூரநோக்கான பேச்சாற்றல் திறமையும் என்னை எழுத்துத் துறைக்குள் பிரவேசிப்பதற்கு ஆர்வத்தை தூண்டியது எனலாம். அந்த ஆர்வத்தினால் எனது சிந்தனையில் தோன்றும் விடயங்களை அவ்வப்போது எழுதி வந்தேன். அதன் தார்ப்பரியமே எனது அப்பாவின் தூண்டுதலில் 15ஆவது வயதில் நான் எழுதிய இஸ்லாமியக் கீதம் மீலாத் நபி இஸ்லாமியக் கீதப் போட்டியில் முதலிடம் பெற்றமை எழுத்துத் துறையில் கிடைத்த எனது முதல் வெற்றியாகும். அதனைத் தொடர்ந்து பாடசாலை மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு கவிதைகள், கட்டுரைகள், இஸ்லாமியப் பாடல்கள், சிறுகதைகள் என பல வகையான இலக்கிய வடிவங்களை எழுதி வெற்றி பெற்றேன். அதன் பின்னர் எனது படைப்பாக்கங்களை வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, விடிவெள்ளி போன்ற பத்திரிகைகளில் எழுதி பிரசுரமானதுடன் வானொலி நிகழ்ச்சிகளிலும் ஒலிபரப்பப்பட்டது. இவ்வாறாக இலக்கியத் துறைக்குள் நுழைந்து எனது முதல் ஆக்கப்படைப்பாக 1966இல் வீரகேசரி பத்திரிகையின் முஸ்லிம் சுடர் என்ற பகுதியில் பிரசுரமான 'இஸ்லாத்தின் சிறப்பியல்புகள்' என்ற கட்டுரையும், ரேடியோ சிலோன் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாக்கப்பட்ட 'இல்லறப் பெண்ணே!' என்ற கவிதையும் சமூகத்தின் மத்தியில் என்னை ஒரு எழுத்தாளராக அடையாளத்தை தந்து ஐந்து நூல்களைப் படைப்பதற்கான ஊக்கத்தை தந்தது எனலாம். இவ்வாறாக ஆரம்ப காலங்களில் எனது கணவரின் ஒத்துழைப்பும், இன்று எனது பிள்ளைகள், மருமக்கள்மாரின் ஆதரவும் இன்று

வரை எழுத்துத் துறையில் என்னை பயணிப்பதற்கு உறுதுணையாக இருந்து வருகின்றது எனலாம்.

? உங்களது படைப்பாக்கத்தில் வெளிவந்த ஐந்து நூல்கள் குறித்து கூறுவீர்களா?

எனது முதல் நூல் படைப்பாக 2006இல் 'அரங்கேறும் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பாகும். இந்நூலில் வெளிவந்த எனது கவிதைகள் அனைத்தும் இலங்கை வானொலி, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சக்தி FM ஆகியவற்றில் ஒலி, ஒளிபரப்பப்பட்டதும், தினகரன், தினபதி, சிந்தாமணி, வீரகேசரி பத்திரிகையில் பிரசுரமாகியதாகும். 2ஆவது படைப்பாக 2016இல் 'இல்லத்தரசிகளும் இல்லற வாழ்வும்' என்ற கட்டுரைத் தொகுப்பும், 3ஆவது, 4ஆவது படைப்பாக 'சிந்தனை முத்துக்களும் வாழ்வியற் தத்துவங்களும்' என்ற சிந்தனைத் துளிகள் தொகுப்பும், 'அனாவின் வண்ணத்துப் பூச்சி' என்ற சிறுவர் பாடல்கள் தொகுப்பும், 5ஆவது படைப்பாக 2021இல் 'நபி வழியில் நாம்' என்ற இஸ்லாமிய கவிதைகளும், பாடல்களும் அடங்கிய தொகுப்பாக இது வரையில் வெளியிட்டுள்ளேன்.

? வருங்காலத்தில் உங்களது எழுத்தாக்க படைப்புகளாக வெளிவர இருக்கும் நூல்கள் குறித்து கூறுவீர்களா?

தம்பலகாமம் பிரதேச செயலகம், திருகோணமலை மாவட்ட செயலகம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் பரிசு பெற்ற சிறுகதைகள் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்றினையும், கவிதைகள் தொகுப்பு நூல் ஒன்றினையும், இஸ்லாமிய பொது அறிவுகள் சே



ர்ந்த நூல் ஒன்றினையும் வெளியிடுவதற்கு உத்தேசித்து உள்ளேன். அதற்கான வேலைப்பாட்டில் ஈடுபட்டு வருகிறேன். முடியும் தருவாயில் உள்ளன.

? இலக்கியத் துறையில் உங்கள் வாழ்வில் மறக்க முடியாத தருணம் குறித்து கூறுவீர்களா?

1964இல் நான் முதன்முதலாக எழுதிய 'இஸ்லாமியக் கீதம்' கிண்ணியா மத்திய கல்லூரியில் நடைபெற்ற மீலாத் நபி இஸ்லாமியக் கீதப் போட்டியில் முதலாவதாகத் தேர்வாகி பரிசு பெற்றமை எனது வாழ்வில் மறக்க முடியாத மகிழ்ச்சி நிறைந்த நாளாகவே இன்றும் நினைவு கொள்கிறேன்.

ஜல், ஜல், ஜல் எனும் சலங்கை ஒலி என்ற தலைப்பில்
ஓது, ஓது, ஓது, உயர் திருக்குர் ஆன்
கூறு, கூறு, கூறு அதன் சிறப்புகளை
வா! வா! வா! வல்லோன் பாதையிலே!
வளமாய் வாழ்வாய் உலகத்திலே!
என்றவாறாக அமையும்.

? 73ஆவது வயதிலும் எழுத்துத் துறையின் தாகம் குறையாமல் தொடர்ந்து எழுதி வருகிறீர்கள். அந்த வகையில் உங்களது அனுபவம் எவ்வாறு உள்ளது?

திருமலை மண்ணின் கலைஞர்கள் ஒரு பார்வை - 31

மூத்த பல்துறை எழுத்தாளர் கலாபூஷணம் ஹாஜியானி றாகிலா மஜீத் நூன் கலைஞரின் சாதனைக் கலைப் பயணம்.

எழுதுவதே எனது முழுமூச்சாகும். எழுத்துத் துறை எனது வாழ்வினை பூரணப்படுத்திய ஒரு மன உணர்வையே தருகிறது. எதையும் எச் சந்தர்ப்பத்திலும் எழுதக்கூடிய ஆற்றலைத் தந்துள்ளது. இன்னும் எழுத வேண்டும் என்ற ஆதங்கமும், புத்தகங்களைப் படைக்கவும், வாசிக்கவும் கூடிய திடத்தை தந்துள்ளது என்றே கூறலாம்.

? உங்களது எழுத்துக்கள் வாசகர்கள் மனதில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது?

வாசகர்கள் மத்தியில் சிந்தனைகளை ஆழமாகத் தூண்டும் வகையிலாகவே நான் எனது ஒவ்வொரு படைப்பையும் எழுதி வருகின்றேன்.

? இன்றைய இளம் பெண் எழுத்தாளர்களுக்கு கூற விரும்புவது?

நாங்கள் ஒரு எழுத்தாளர் என்ற எண்ணத்தை கொண்டிருக்கக் கூடாது. எமது எழுத்து வாசகர் மனதை பெரிதும் ஆளக் கூடிய சக்தியாக அமைவதற்கான திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். சமூகத்திற்கு பயன்படும் வகையிலான சிந்தனை மிக்க படைப்புகளை படைத்து சமூகத்தால் வரவேற்பு பெற்று அங்கீகாரத்தை பெற முயற்சி செய்து உழைக்க வேண்டும். எழுத்தாளராக மட்டுமில்லாமல் வேறு துறைகளிலும் எம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். கிடைக்கின்ற சிறு சந்தர்ப்பங்களையும் பெரிய வாய்ப்புகளாக கருதி பயன்படுத்தி எம்மை வளப்படுத்திக் கொண்டு அடையாளத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதை எனது கருத்தாகும்.

? திருகோணமலை மாவட்டத்தின் இலக்கியத் துறையின் அண்மைக்கால போக்கு குறித்து கூறுவீர்களா?

திருகோணலை மாவட்டத்தை பொறுத்



தவரை எழுத்தாளர்களின் வருகை பரவலாகவே உள்ளது. பரந்துபட்ட அறிவையும், அதிக தொடர்பாடலையும் கொண்டிருக்கிறார்கள். எனினும் ஒரு சிலரே சமூகத்தின் பெறுமானம் கொண்ட எழுத்துக்களை தொடர்ந்து எழுதி வருகிறார்கள் என்றே கூறலாம். முன்னர் காலத்தை விட இன்று வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன. அவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் சரியான இலக்குப் பாதையை அடைந்திட முடியும்.

? இலக்கியத் துறையில் நீங்கள் பெற்ற விருதுகள் குறித்து கூறுவீர்களா?

2010இல் கலாபூஷணம் அரச விருது, 2014இல் தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட இலக்கியப் பெரு விழாவில் பாராட்டி விருது கிடைத்தமை, கிழக்கு மாகாண வித்தகர் விருது, கிழக்கு மாகாண கலை இலக்கிய விருது, சர்வதேச முதியோர் தின விருது, கவித்தாரகை விருது, கலைமதி விருது எனப் பல விருதுகள் கிடைத்துள்ளன.

? நிறைவாக, வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கு கூற விரும்புவது?

சிறந்த புத்தகங்களைத் தேடித் தேடி வாசியுங்கள். வாசிப்புக்காக முடிந்தவரை ஓய்வு நேரத்தை செலவிடுங்கள். வாசிப்புப் பழக்கத்தை பயிற்சியாகக் கொள்ளுங்கள். அதுவே உங்களை சரியான பாதையிலும், தெளிவான சிந்தனைக்கும் வழிவகுக்கும். இதன் மூலமாக உங்களது எழுத்தின் ஆளுமை வளர்க்கப்பட்டு சமூக முன்னேற்றத்திற்கான இலக்கிய பங்களிப்பை செய்ய முடியும் என்ற நம்பிக்கை உங்களிடத்தில் தானாகவே வளரும். முயற்சி செய்யுங்கள். அதன் வழியே உங்களுக்கான வாய்ப்புகள் கிடைத்து வெற்றிக்கனியை பறித்து விடுவீர்கள். அந்த வகையில், எம் போன்ற கலைஞர்களை வெளிக்கொண்டு வரும் சுவீட்சம் பத்திரிகைக்கு எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு இப் பணித் தொடர வாழ்த்துகின்றேன்.

நன்றி!

தனது 73ஆவது வயதிலும் இன்றுவரை இலக்கியத்துறையின் தணியாத தாகத்தால் தொடர்ந்து எழுத்தாக்க படைப்புகளை எழுதி வரும் பெண் எழுத்தாளரான இவர் போற்றுதற்குரியவராவார். இவ்வாறாக பல்துறைகளிலும் வலம் வந்து தனது தனித்துவமான எழுத்தாளுமையால் திருகோணமலை மாவட்டத்திற்கு பெருமையைத் தேடித் தந்த இக் கலைஞர் நோய் நொடியின்றி, நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு கலைஞரை சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

நன்றி!

தொடரும்.....

கலைஞர்களுக்கான தேடலின் பயணத்தோடு
திருமலை தட்சாயினி
ஞானசங்கரன்

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக சுஜாதா பதவியேற்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண பதில் மாகாண கல்விப் பணிப்பாளராக மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார் நேற்று திங்கட்கிழமை (02) கடமையேற்றார்.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தனது 60 வது வயதில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவைக்குள் உள் நுழைந்த இவர், 2017 இல் இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர உத்தியோகத்தராக பதவி உயர்த்தப்பட்டவர்.

இள வயதில் மட்டு. வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை அதிபராகவும் கடந்த நான்கு வருடங்களாக மட்டு. வலயக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர், மிக இளவயதில் மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையேற்றுள்ளார். இவர் 2035 வரை கடமையாற்ற வாய்ப்புள்ளது.

தொடர்ச்சியாக பெண்மணிகள் மாகாண கல்வி பணிப்பாளர் பதவியை அலங்கரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் திருமதி நகுலேஸ்வரி புள்ள நாயகம் தொடர்ந்து செல்வி.அகிலா கனகசூரியம் இன்று திருமதி சுஜாதா குலேந்திரகுமார் பதவியேற்றுள்ளார்.

விடுதலைப் புலிப் போராளிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல

சிங்கள நூல் வேளியீட்டில் தீபச்செல்வன் உரை!

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல என்று தெரிவித்துள்ள தீபச்செல்வன், தலைவர் பிரபாகரன் அதனை தீர்க்கமாக எடுத்துரைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டத்தில் இடம்பெற்ற பதுங்குகுழியில் பிறந்த குழந்தை நூலின் சிங்கள மொழியாக்க நூல் வெளியீட்டில் தீபச்செல்வன் ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவாவது:

இரண்டு இனங்களுக்கு இடையிலான உரசல்:

இந்த உரையை உங்கள் முகங்களைப் பார்த்து உங்கள் மொழியில் பேசமுடியாத நிலையையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். ஏனென்றால் சிங்கள மொழியென்பது, எங்கள் சிறுபராயத்திலே போரின் மொழியாக, எங்கள்மீதான ஒடுக்குமுறையின் மொழியாகத்தான் எம் செவிகளுக்கு வந்தது என்பது இந்த தீவினுடைய துரதிஷ்டமான உண்மை. சிங்கள மொழியில் கேட்கின்ற சொற்கள் எங்களுக்கு அச்சமூட்டுவதாக எங்கள் உயிர்களை பறிப்பதாக இருந்தது என்பதுதான் நாங்கள் கடந்து வந்த வரலாறு, உண்மையில் அந்த நிலையையிட்டு மிகவும் வேதனைப்படுகிறேன். என்னுடைய மொழியில் பேசுகின்ற பொழுது நிச்சமாக உங்கள் செவிகளுக்கு அது புரியாத இந்த நிலை, எனக்கு அதிருப்தி தருவதாக துயரம் தருவதாக இருந்தாலும் இலங்கைத் தீவில் இரண்டு இனங்களுக்கும் இரண்டு மொழிகளுக்கும் இடையில் இருக்கும் உரசலின் உண்மை நிலை இது என்பதுதான் துதிஷ்டமான துயரம் தருகின்ற நிலைமை. இருந்தாலும்கூட இந்த நிலை மாறி வருகின்ற ஒரு வெளிப்படாக இந்த நூலினுடைய வெளிப்பாடு அமைந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

என்னுடைய முதல் நாவல் நடுகல். அது சிங்களத்தில் மொழியாக்கப்பட்ட போது அதற்கு சிங்கள சமூகம் மிகப் பெரிய வரவேற்பை அளித்தது. கல்வியியலாளர்கள், படைப்பாளிகள், சாதாரண சிங்கள இளைஞர்கள், மக்கள் என்று மிகப் பெரிய வரவேற்பை எனக்கு அளித்தனர். உண்மையில் மிக ஆச்சரியமாக இருந்தது. விடுதலைப் போராட்டத்திற்கும் போராளிகளுக்கும் எதிரான சில தமிழர்கள்கூட, என்னுடைய நாவல்மீது சேறடிப்புக்களையும் அவதூறுகளையும் வீசிய போதும் கூட என்னுடைய நாவல் குறித்து ஒரு எதிர்ச்சொல்லைக்கூட நான் சிங்கள சமூகத்திடம் இருந்து கேட்கவில்லை. எனவே சிங்கள சமூகத்திடமும் சிங்கள மொழியிலும் ஒரு மாற்றம் உருவாகி வருவதை எங்கள் இனம்மீது எங்கள் மக்கள்மீது ஒரு அணைப்பு ஏற்பட்டு வருவதை நான் உணர்கின்றேன். அந்த அடிப்படையில்தான் இந்த கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வும் அரங்கேறி இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன்.

சிங்களப் படைப்பாளிகளை கொண்டாடிய புலிகள்:

இந்த வெளியீட்டில் பெருந்திரளான மக்கள் அமர்ந்திருப்பதும் கூட எனக்கு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருகின்ற விடயமாகும். இந்த இடத்தில் சிங்கள மக்களின் இதயங்களைப் பார்த்து அவர்களின் அன்பைப் பார்த்து நான் மிகவும் ஆசுவாசப்படுகிறேன். மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இடத்தில் இன்னொரு முக்கிய விடயத்தையும் பதிவு செய்ய விரும்புகிறேன். 2001 ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலத்தில் சமாதானச் சூழல் இலங்கையில் ஏற்பட்ட போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு இலக்கிய மாநாடு ஒன்றை மானுடத்தின் ஒன்றுகூடல் என்ற தலைப்பில் நடத்தியிருந்தது. அதில் பெருமளவான சிங்கள முற்போக்குப் படைப்பாளிகள் கலந்துகொண்டிருந்தார்கள்.

உண்மையில் சிங்களப் படைப்பாளிகளை தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் பெரியளவில் கொண்டாடினார்கள், மதித்தார்கள் என்ற விடயத்தை இந்த இடத்தில் பதிவு செய்கிறேன். கவிஞர் மஞ்சுள வெடிவர்த்தன. ஊடகவியலாளர் பாஷன அபேவர்த்தன போன்ற படைப்பாளிகள் அன்று எங்களுடைய மண்ணில் நடந்த இலக்கிய மாநாட்டில் கலந்துகொண்டு மானுடத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்த நிகழ்வை இந்த இடத்தில் நினைவுகூர்கிறேன். பின்வந்த காலத்தில் எங்களுக்காக குரல் கொடுத்தமைக்காக அவர்கள் இந்த நாட்டில் உயிர் அச்சுறுத்தலால் புலம்பெயர்ந்த நிலையையும் நினைவுபடுத்துகிறேன்.

ஒவ்வொரு வீட்டில் இருந்தும் விதைத்துள்ளோம்:

எங்களுடைய போராளிகள் என்பவர்கள், எங்களுக்குப் பிறிதானவர்களல்ல. என்னுடைய வீட்டில்

எனது சகோதரன் ஒரு விடுதலைப் புலிப் போராளி. எங்கள் வீடுகள் தோறும் ஒவ்வொரு போராளிகள் இருந்தார்கள். அவர்கள் எங்களுடைய மக்களின் விடுதலைக்காக எங்களுடைய தேசத்திற்காக தங்களுடைய இளம்வயதில் தங்களுடைய வாழ்க்கை, தங்கள் நலன்கள், கனவுகளைத் துறந்து, போராடச் சென்றார்கள். நாங்கள் எங்கள் வீடுகளில் இருந்து ஒவ்வொருவரையும் எங்கள் மண்ணில் விதைத்திருக்கின்றோம்.

நான் எங்கள் போராளிகளைப் பற்றி பேசுவது தயவு செய்து நீங்கள் எங்கள் போராளிகள் மீது தவறான எண்ணம் கொள்ளக் கூடாது.

ஏனென்றால் எங்கள் போராளிகள் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் சிங்கள மக்களுக்கு ஒருபோதும் எதிரானவர்கள் அல்ல. நாங்கள் சிங்கள மக்களின் அபிலாசைகளுக்கு எதிரானவர்களல்ல. நாங்கள் சிங்கள மக்களை ஏற்றுக்கொள்ளுகிறோம். சிங்கள மக்களின் அபிலாசைகளை ஏற்றுக்கொள்ளுகிறோம். சிங்களப் பேரினவாத அரசுக்குத்தான் நாங்கள் எதிரானவர்கள். அதற்கு எதிரானதுதான் எங்கள் போராட்டம் என்பதை எங்களுடைய போராளிகள், எங்களுடைய தலைவர் பிரபாகரன் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார். அந்த அடிப்படையில்தான் எங்கள் மண்ணில் அந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது.

சிங்களப் படைப்பாளிகளின் இதயத்தில் எங்கள் விடுதலை :

இப்போதும் நாங்கள் நிராயுதமாக்கப்பட்டவர்களாக, காவல் இழந்தவர்களாக, அச்சுறுத்தப்பட்டவர்களாக, சுதந்திரமற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த இடத்தில் பெருமளவான சிங்கள படைப்பாளிகள் வருகை தந்து என்னுடைய நூல் தொடர்பாகவும் இலங்கையின் நிலவரம் தொடர்பாகவும் பேசக்கூடிய நிலமை இங்கே இருக்கிறது. ஆனால் வடக்கு கிழக்கில் ஒரு தமிழ் படைப்பாளியின் நூல் வெளியீட்டு விழாவில் இவ்வளவு சிங்களப் படைப்பாளிகள்கூட கலந்துகொண்டு பேசமுடியாத அடக்குமுறை சூழல் அங்கே இருக்கிறது. நாங்கள் இப்போதும் ஒன்றை தெளிவாக நம்புகிறோம். மஞ்சுள வெடிவர்த்தன போன்ற சிங்கள சமூகத்தின் மனசாட்சிக் கவிஞர் போல பாசண பேவர்த்தன போன்ற சிங்கள சமூகத்தின் மனசாட்சி ஊடகவியலாளர் போன்றவர்கள் மீண்டும் எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். எங்களுடைய மக்களுக்காக வடக்கு கிழக்கினுடைய அமைதிக்காக வடக்கு கிழக்கின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும். உண்மையில் எங்கள் மக்களின் விடுதலையும் எங்கள் நிலத்தின் அமைதியும் சிங்களப் படைப்பாளிகளின் இருதயத்தில்தான் தங்கியிருக்கிறது என்று திடமாக நம்புகிறேன்.

தொடர்ந்தும் இந்த தீவில் இனமேலாதிக்கமும் இன முரண்பாடும் நீடிக்குமாக இருந்தால் இலங்கை மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் முகம் கொடுக்க நேரிடும். சந்திராயன் என்கின்ற விண்கலத்தை இந்தியா நிலவுக்கு அனுப்பியிருந்தது. அந்த விண்கலம் நிலவில் கால் பதித்த தருணத்தில் வடக்கில் தமிழர்களின் தொன்மையான பகுதியில் பௌத்த விகாரை ஒன்றை அமைப்பதற்கான போட்டியும் முரண்பாடும் நிகழ்ந்தது. அங்கு தமிழர்கள் ஒரு பொங்கல் வழிபாட்டை செய்ய முடியாத அடக்குமுறை நிகழ்ந்தது. இந்தியா நிலவில் கால் பதிக்கும் சமயத்தில் இலங்கையில் - வடக்கு கிழக்கில் நில ஆக்கிரமிப்புக்காக கால் பதிக்கின்ற நிகழ்வு இடம்பெறுகின்றது. வரலாறு முழுவதும் தமிழர்களை ஒடுக்குவதிலும் அழிப்பதிலும்தான் இலங்கை அரசு தன்னுடைய பொருளாதாரத்தையும் தன்னுடைய அறிவுப்புலத்தையும் செலவிட்டு வந்துள்ளது. அந்த அறிவுப் புலத்தை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கும் அறிவியல்களுக்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் இலங்கை அரசு பயன்படுத்தியிருந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்திராமல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பேராளுமை மிக்க இயக்கத்தின் கோரிக்கையான அரசியல் தீர்வினை முன்வைத்து அந்த இயக்கத்தை அணைத்துச் சென்றிருந்தால் இலங்கை அரசாங்கம் நிலவில் கால் பதித்திருக்க முடியும்.

இலங்கையில் இரண்டு தேசங்கள் மலர்ந்தால்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்த விடயத்தை தீர்க்கமாக ஒருமுறை பேசியிருந்தார். இலங்கைத் தீவில், தமிழர்களின் உரிமை அங்கீகரிக்கப்படுதமாக இருந்தால் இலங்கையில் இரண்டு சம அந்தஸ்துள்ள தேசங்கள் மலருமாக இருந்தால் இலங்கையும் தமிழர் தேசமும் வல்லமை கொண்ட தேசமாக இந்த உலகத்தில் மளிரும் என்று அவர் கூறியிருந்ததும் அந்த அடிப்படையில்தான்.

அன்புக்குரிய நண்பர்களே! போர் எங்கள் கனவுகளைத் திருகியிருந்தது. போர் தொடர்பான ஞாபகங்களை மறக்க முடியாது. அதனுடைய வடுக்களாகத்தான் எங்கள் இலக்கியங்கள் உருவாகியிருக்கின்றன. நாங்கள் பெயருக்காகவும் புகழுக்காகவும் அங்கீகாரத்திற்காகவும் படைப்புக்களை எழுதத் துவங்கவில்லை. எங்கள் இருப்புக்காகவும் அடையாளத்திற்காகவும் விடுதலைக்காகவுமே எங்களுடைய படைப்புக்களை எழுதி வருகின்றோம். அந்த அடிப்படையிலே முதன் முதலிலே மிக நெருக்கமான என்னுடைய கவிதைகள், சிங்கள இதயங்களோடு என்னுடைய கவிதைகள் பேசத் தொடங்கும் இந்தத் தருணம், மிக நெக்ழ்ச்சியும் மிகிழ்வும் ஆறுதலும் தருகிறது. இந்தப் பயணம் தொடர வேண்டும். மேலும் பல ஈழத் தமிழ் படைப்பாளிகளினுடைய படைப்புக்கள் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக உரையாடல்கள் நிகழ வேண்டும். இலங்கைத் தீவில் அமைதியும் சமாதானமும் தமிழர்களுக்கான விடியலும் ஏற்பட வேண்டும் என்று வேண்டி விடைபெறுகிறேன் என்று கவிஞர் தீபச்செல்வன் மேலும் குறிப்பிட்டார்.

சிறுவர்களுக்கான மென்பந்து கிறிகெட் சுற்றுப்போட்டியில் திருமலை ஆண் அணியினர் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது!

(அபு அலா)

உலக சிறுவர் தினத்தையொட்டி கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட சிறுவர்களுக்கான மென்பந்து கிறிகெட் சுற்றுப்போட்டி திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என். எம். நௌபில் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டிக்கு கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் (திருமதி) ஆர். றில்வானி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் பி. மதனவாசகன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்த கிறிகெட் சுற்றுப்போட்டியில், கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுவர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற மென்பந்து கிறிகெட் சுற்றுப் போட்டிகளில் தெரிவாகியவர்களை மாகாண மட்டத்தில் கலந்துகொள்ள வைக்கும் நோக்கில் இடம்பெற்ற இப்போட்டியில், ஆண்கள் பிரிவில் 3 அணியினரும், பெண்கள் பிரிவில் 3 அணியினரும் இப்போட்டியில் பங்குபற்றினர்.

அணிக்கு 11 பேர் கொண்ட இச்சுற்றுப்போட்டி, 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக அமைந்தது. இதில் திருகோணமலை மாவட்ட ஆண்கள் அணியினர் வெற்றிபெற்றனர். பெண்கள் அணியில் மூன்று மாவட்ட அணியினரும் கூட்டு வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் வெற்றிபெற்ற பெண்கள் அணியினருக்கான கூட்டு கிண்ணத்தை கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்கள மாகாண ஆணையாளர் (திருமதி) ஆர். றில்வானியும், ஆண்களுக்கான சம்பியன் கிண்ணத்தை கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் என். எம். நௌபில் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

மாகாண மட்ட இறுதிப் போட்டிக்காக நடாத்தப்பட்ட கிறிகெட் சுற்றுப்போட்டியிக்கு கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம் அனுசரனை வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.